# தென்மொழி


## இருப்பவர் கலைஞரே! வடபுயல் சுவர், அவர்!

நெருப்பினில் தமிழினம் வெந்துகொண் டுள்ளது;
நேற்றைய வரலாறு மறைந்துகொண் டுள்ளது!
தெருப்புறம் தமிழர்க்குள் கூச்சலும் குழப்பமும்!
தேர்தலில் வெல்பவர் யார் — எனும் போட்டிகள்!
உருப்பெறும் வகையினில் ஒருவரும் இல்லைதான்!
உண்மையும் நேர்மையும் உலவிடா நிலைமைதான்!
இருப்பினும் கலைஞரே தமிழினம் காப்பவர்!
எரிகின்ற கொள்ளியில் எதிரிக்கு நெருப்பவர்!

அரசியல் விரகரே அனைவரும்; உண்மைதான்!
ஆட்சிக்கு வந்த பின் மாறுவார்! மெய்ம்மைதான்!
உரசிப் பார்த்திடில் ஒருவரும் இல்லைதான்!
ஊர்டி கொள்ளையில் உலைவேகும் காட்சிதான்!
வரிசையை அளந்திடில் வாய்ப்பேச்சுக் காரர்தாம்!
வந்தபின் ஆட்சிக்கு வருவாயே கொள்கைதான்!
முரசொலிக் கலைஞரே, இருப்பினும், மேலவர்!
முத்தமிழ் எதிரிக்கு என்றுமே வேல், அவர்!

இனநலம் காப்பதாய் எல்லாரும் சொல்கிறார்!
இனிமைப் பேச்சினில் எல்லாரும் வெல்கிறார்!
மனநலம் இருந்திடில் அல்லவோ மக்களின்
மாண்பினைக் காத்திட எண்ணுவர்! தமிழரின்
முனைநலம் யாவுமே பறிகொண்டு போயினர்!
முன்நிலம் மீட்பதில் எவருமே முனைந்திலர்!
இனநிலை உணர்ந்ததைக் காப்பதற் கெவருளர்?
இருப்பவர் கலைஞரே! வடபுயல் சுவர் — அவர்!


ஆசிரியர்.
பெருஞ்சித்திரனார்

சுவடி : 24
ஓலை : 8

விலை
உருபா:2-00

# நமக்கு வந்த மடல்கள்.

O: 1308: அன்பிற்கும் வணக்கத்திற்குமுரிய ஐயா, வணக்கம். அன்று மாலையில் தங்களிடமிருந்து புறப்படும்போது மறுநாள் 10 மணிக்குமேல் அச்சகம் வந்து சந்திப்பதாகக் கூறி வந்தேன். ஆனால் நான் தங்கியிருந்த இடம் வந்தபின் நாங்கள் மேற்கொண்டிருந்த வேலைத் தொடர்பாக மறுநாளே மதுரை மாவட்டாட்சியர் அலுவலகத்தில் இருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருந்ததை வைத்து உடனே புறப்பட்டு விட்டோம். நான் வரமுடியாமற் போனதற்கும் இதுபற்றி உடனே எழுதியாவது தெரிவிக்காமல் சுணங்கியதற்கும் வருந்துகிறேன். பொருத்தருளுமாறு வேண்டுகிறேன். இப்போதைக்கு நான் மிகுந்த இடர்பாடுகளில் சிக்கி அல்லற்படுகிறேன். எதிலும் நிலையான ஒரு முடிவை மேற்கொள்ள முடியாமலும் தடுமாறுகின்றேன். தங்களின் மேலான எண்ணங்களையும் உணர்வுகளையும் எழுத்தில் வடிக்க நேரமின்றி, அச்சுப் பொறியில், உடலுழைப்பில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு அப்படியே நான் அங்கு தங்கிவிட நினைக்கிறேன். ஆனால் என் குடும்பச் சூழல், குழந்தைகளின் நிலை வீட்டுக்கு இழுக்கின்றன. இப்படியே என் காலம் ஓடுவது எனக்குப் பிடிக்கவில்லைதான். என்ன செய்ய போகிறேனோ, என்னால் ஒரு முடிவும் செய்ய முடியவில்லைதான். என் உணர்வுகளும் திட்டங்களும் வெறும் நினைவுகளாகவே பயனற்றுப் போய்விடத்தான் போகின்றன என எண்ணி வருந்துகின்றேன். — இரும்பொறை, அம்மச்சியாபுரம்,

O: 1309: மதிப்பிற்குரிய ''தென்மொழி'' ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம். ''தாய்மொழிப்பற்று, தமிழ்மொழிப்பற்றுக் கொள்வது செயற்கைத்தனம். வந்தேறிய மொழிகளை வளர்ப்பதும், கற்பதுமே இயற்கைத்தனம்'' இதுவே தமிழகம் இன்றிருக்கும் இழிநிலைக்குத் தோற்றுவாய். தமிழரெல்லாம் உண்மையான தமிழராக வாழ்வதற்கான காலம் இன்றைய சூழ்நிலையில் கனிவதற்கு சில/பல ஆண்டுகள் ஆகலாம். ஆகவே ''தென்மொழி'' என்ற தேன்மொழித் தாளிகை, உலக நடப்புகளைக் கலப்பற்ற தீந்தமிழில் வடித்துத் தருவதை மட்டும் தன்னுடைய தற்பேதைய குறிக்கோளாகக் கொள்ளட்டும். தமிழால் எந்த அறிவியல் செய்தியையும், தெளிவாக எடுத்துச் சொல்ல முடியும் என்ற உண்மையை இதனால், இளித்தவாய்த்தமிழர் விரைவில் புரிந்து கொள்ள வழி பிறக்கும். உண்மையான தமிழகம் தோன்றுவதற்கான சூழ்நிலை அப்போது உருவாகும்.

இவண், — கீதா உதயகுமார், ஐதராபாது

O: 1310: அன்புடையீர், வணக்கம். எத்தனையோ தொல்லைகளுக்கிடையில் தாங்கள் உழன்று கொண்டுள்ளீர்கள். இருப்பினும், எப்படித்தான் இத்தனைத் தொல்லைகளையும் தாங்கிக் கொள்ள இயல்கிறதோ அறியேன். இந்தக் கேடுகெட்ட தமிழ் நாட்டுக்காக, மக்களின் நன்மைக்காக எத்துணைதான் எழுதினும், பேசினும், பாடுபடினும் திருந்தாத மக்கள் இந்நாட்டு மக்கள். விடுதலையை எண்ணி எண்ணி எழுதினும் வீரம்கொள்ளாத மக்களை எண்ணி எண்ணி உளம் நொந்து போகின்றீர்கள்! அழியாத —

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

அன்பர்களுக்கு ஒரு துயரச் செய்தி!

# தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு இதழ்கள் விரைவில் நிறுத்தப்படும்!

***தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்*** ஆகிய இதழ்களைத் தொடர்ந்து நடத்துவதில் உள்ள செயல் நிலை, பொருள் நிலை, இடர்ப்பாடுகளைப் பற்றியும், என் தனிப்பட்ட பணிநிலை அழுத்தங்கள், துன்ப, துயரங்கள் பலவற்றையும் பற்றியும், நான் மனந்திறந்து பல முறை என் கருத்துகளையும், உள்ள, உயிருணர்வுகளையும் வெளிப்படுத்தியிருக்கின்றேன்.

கடந்த முப்பதாண்டுகளாக இம் முயற்சியிலேயே என் உடல், உள்ளம், அறிவு, வாழ்க்கை, குடும்பம் அனைத்தும் நலிந்தும், நசிந்தும் போய்விட்டன. ஏறத்தாழ என் வாழ்நாளில் மூன்றில் இரண்டு பங்கை இதிலேயே செலவு செய்து விட்டேன். இப்பொழுதுள்ள தமிழினத்தை நோக்கி, அதன் மிடி நீக்கத்தையும் விடிவு ஆக்கத்தையும் எண்ணியும், அவற்றுக்கான செலவழிக்கப்பட்ட என் வாழ்க்கைக் காலம், அரும் பொருள், நெஞ்சவுணர்வுகள், ஏற்பட்ட விளைவுகள் முதலிய அனைத்தையும் கணக்கிட்டுப் பார்க்கையில், எனக்குக் கிடைக்கும் விடை என் அறிவுக்கு நிறைவு தருவதாயில்லை.

எனவே, இனிமேலும், எனக்கு இயற்கையால் கொடுக்கப்பட்ட ஆற்றல்கள், வான் நோக்கி எய்யும் அம்புகளாக, வீணாய்ப் போய்க் கொண்டிருக்க நான் விரும்பவில்லை. இனி, எஞ்சியுள்ள அவற்றை அறிவாக்கத்திற்கும் எதிர்காலத் தமிழினத்திற்கும் முழுவதுமாகப் பயன்படுத்தி, நிறைவுடன் இவ் வாழ்வை முடித்துக் கொள்வது என்று எண்ணங் கொண்டு விட்டேன்.

ஆனால் இவ்வெண்ணத்தை முடிவான செயலாகச் செய்வதற்கு இன்னும் நான்கு மாத இடைவெளியை இடையீடாகக் கருதியுள்ளேன். அதற்குப் பின்னர், இக்கால் வெளிவந்து கொண்டிருக்கும் மூன்று இதழ்களும் கட்டாயம் நிறுத்தப்படும்!

இவற்றை நிறுத்தக் கூடாது, நிறுத்த வேண்டாம் என்று கருத்துக் கூறவோ, கட்டளையிடவோ பக்கம் பக்கமாக மடல்கள் எழுதவோ யாரும் முன்வர வேண்டாம். ஏனெனில், இந்த முடிவை நான் சட்டென்று எடுத்து விடவில்லை. தீவிரமான, நடுநிலையான விருப்பு வெறுப்பற்ற, தெளிவான மனநிலை, அறிவுநிலை ஆய்வுகளுக்குப் பின்னரே அம்முடிவுக்கு நான் வந்துள்ளேன். ஆனாலும், இத்துணைக்காலும் நான் பழகியிருந்த, அன்புசார்ந்த, தமிழின நாட்டம் கொண்ட தூய உள்ளங்களுக்காக வரைமுறை ஒன்றை வகுத்துள்ளேன். இந்த நிலைகளையெல்லாம் மிகவும் விளக்கி நீண்டஉணர்வு

வெளிப்பாடுகளாக உங்கள் முன் வைக்க நான் விரும்பவில்லை; இருப்பினும் நான் மதிக்கின்ற அன்புள்ளங்கள், இவ்விதழ்கள் நிறுத்தப்படுவது குறித்துப் பதைபதைத்து விதிர்விதிர்ப்புற்று ஓரிரு கருத்துகளையோ வேண்டுகோளையோ எனக்குத் தெரிவிக்க விரும்பினால், அவர்கள் எனக்கெழுத விரும்பும் மடலில் உள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் பத்துப் பத்து உருபா கணக்கிட்டு, அதற்கான வரைவோலையை (Draft) அம்மடலுடன் வைத்து அனுப்பட்டும். அவ்வாறு வரைவோலையில்லாத எந்த மடலும் என்னால் படிக்கப் பெறாமல் (உறுதியாகப் படிக்கப் பெறாமல்) அவர்களுக்கே அஞ்சல்தலை ஒட்டாமல் திருப்பி அனுப்பப் பெறும்.

அவ்வாறு, அனுப்பப் பெறும் மடல் தொகை, வரும் 10-3-1989 முடிய உருபா ஓர் இலக்கத்தை (உரு: 1,00,000) எட்டினால் மட்டுமே, இந்தக் கருத்தை நான் மறு ஆய்வு செய்ய முடியும். அத்தொகைக்கு ஒரே ஓர் உருபா குறையினும், அவ்வாறு அனுப்பப் பெற்ற மடல்களுடன் வந்த அனைத்து வரைவோலைகளும் அனுப்பிய அன்பர்களுக்கே மீண்டும் திருப்பி அனுப்பப் பெறுவதுடன், 12-3-89-இல் தொடங்கி அச்சிட்டு அம்மாத இறுதிக்குள் அனுப்பப் பெறும் இறுதி இதழ்களுடன் என் முடிவான அறிக்கையும் வெளியாகும். இம்முடிவை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. (அவ்வாறு எண்ணுகிற எவரேனும் இருந்தால்.)

மற்றபடி இது பற்றி எவரும் என்னிடம் நேரில்வந்து கருத்துக் கூறுவதை நான் விரும்பவில்லை.

அனைத்து முயற்சிகளும் முடிந்து விட்டன. எனவே என்னைப் பொறுத்துக் கொள்ளுங்கள்!

அன்புநிறை
பெருஞ்சித்திரனார்.

சென்னை, 17-11-88

***பின் குறிப்பு:*** இறுதியாகத் **தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு** ஆகிய இம் மூவிதழ்களிலும் ஆண்டாண்டுக் காலமாக ஏறத்தாழ பதினாறாயிரம் உருபாக்களை, நிலுவையாக வைத்து, இம் முடிவுக்கே முதல் காரணமாக இருக்கும் முகவர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

“நீங்கள் — பல முறை பலவகையிலும் நினைவூட்டி எழுதிய அன்பான — வேண்டுகோளான — கண்டிப்பான மடல்கள் விடுத்தும், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் வைத்துள்ள — பட்டியல் நிலுவைத் தொகைகளை உடனே விடுத்துவிட்டு, ஏதோ சில சூழ்நிலைகளால் அன்றி, பொதுநலம் கருதுபவர்கள்தாம் நீங்கள் என்பதை, இவ்விறுதி வேண்டுகோளைப் பார்த்தாகிலும் விடுத்து விடுங்கள்; இல்லெனில், இவ்வறிக்கையின்படி இறுதியாக வெளிடப்பெறும் மூன்று இதழ்களிலும், ***இம் முடிவுக்கு மூலகாரணமானவர்கள் நீங்கள்*** என்னும் தலைப்பில் தங்கள் பெயர்கள் முகவரிகளுடனும் நீங்கள் தரவேண்டிய நிலுவைத் தொகைகளுடனும், வெளியிடப் பெறும் என்பதை அன்புடனும் எச்சரிக்கையுடனும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.”

— ஆசிரியர்.

பணிக்கு நுழைந்ததிலிருந்து, சொந்தமாக ஒரு வீடு அமையவே இல்லை; அஃதாவது அமைத்துக் கொள்ளவே இல்லை. இன்னுஞ் சொன்னால் அதற்கென ஒரு நாட்டத்தையே நாம் கொள்ள வில்லை. நமக்கென்று சொந்தமாக வீடு என்பதையே நாம் விரும்பவில்லை. நமக்குச் சொந்த வீடு எதற்கு என்றே எண்ணி வந்தோம். இடையில் சில காலங்களில் மிகவும் மலிவாக, எளி-தாக, வீடு விற்பனைக்குக் கிடைத்த பொழுதில் கூட, நாம் நமக்-கென்று ஒரு வீடு தேவை என்று கருதி, அதன் மேல் ஒரு நாட்டத்தையே ஏற்படுத்திக் கொள்ளவில்லை. வாடகை வீடே போதுமானது என்றே அப்பொழுதெல்லாம் கருதி மனநிறைவு கொண்டிருந்தோம். என்னைச் சார்ந்த நண்பர்கள், உறவினர்-களுக்கெல்லாம் கூட, அவரவர்களுக்கென்று சொந்தமாக ஒரு வீட்டைத் தேடி அமர்த்திக் கொள்ள வேண்டுவது மிக மிக இன்றியமையாதது என்று அறிவுரை கூறி வலியுறுத்தி வந்த நாம், நமக்கு அதுபோல் சொந்தமாக ஒரு வீடு தேவையில்லை; அது நாம் உண்மையாகச் செய்யவந்த பொதுப் பணிக்கு இழுக்கு; வேண்டாதது; அஃது ஒரு பழி; கரிசு (பாவம்) என்றெல்லாம் கூட எண்ணி, அதுபற்றிச் சிந்தனையே இல்லாமல், இன்றுவரை, நீண்டகாலம் அதுபற்றிய எந்த முயற்சியிலுமே ஈடுபடவில்லை.

திருக்குறளில் கூட சொந்த வீடு, வாடகை வீடு பற்றித் திருவள்ளுவப் பேராசான் கருதியிருப்பது தெரிகிறது.

புக்கில் அமைந்தின்று கொல்லோ, உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு (304)

—என்னும் திருக்குறளில், புக்கில் என்பதைச் சொந்த வீடு என்னும் பொருளிலும், துச்சில் என்பதை வாடகை வீடு என்னும் பொருளிலும் கூறியிருப்பதைக் காண முடிகிறது. ‘பிறந்து, பிறந்து வாடகை வீடுகளாகிய உடம்புகளிலேயே குடியமர்ந்து வரும் இந்த உயிர்க்கு, ஒரு சொந்த வீடு அமையவில்லை போலும்’ என்று அவர் வருந்தியிருப்பதிலிருந்து, அவர்க்குக் கூட ஒரு சொந்த வீடு இருந்திராமை புலப்படுகிறது. அவர்க்குச் சொந்த வீடு இருந்திருப்பின், உயிரைப் பற்றிய இத்தகைய ஓர் உண்மையும் ஒரு கவலையும் அவர்க்குத் தோன்றியிருக்க வாய்ப்பில்லை.

நாம் புதுவையிலிருந்த பொழுதும் சரி, கடலூரிலிருந்த பொழுதும் சரி, வாடகை வீடுகளிலேயே இருந்து வந்தோம். நமக்குக் குடியிருப்புக்கென்ற அளவில் ஒரு சிறிய வீடே நமக்குப் போதுமானதாக இருந்தாலும், நம் நூலகத்திற்கும், தென்-மொழி, தமிழ்ச்சிட்டு, இக்கால் தமிழ்நிலம் ஆகியவற்றின் பழைய படிகள் இருப்புக்கும் நம் நூல்களின் இருப்புக்கும் சிறிது பெரிய அளவிலேயே உள்ள ஒரு வீடு நமக்குத் தேவையாக இருந்தது.

1974-ஆம் ஆண்டுஇறுதியில் நாம் சென்னை வந்தபின், அச்சகத்திற்கென்றும், குடியிருப்புக் கென்றும் தனித்தனி இல்லங்களையே நாம் வாடகைக்கு அமர்த்திக் கொள்ள வேண்டி-யிருந்தது. நம் ஆறு பிள்ளைகளில், நால்வர் திருமணம் ஆகி

வேறு வேறு இடங்களுக்குப் பெயர்ந்தபின்னும் கடைசிப் பிள்ளைகள் இருவரையும் வைத்துக்கொண்டு இருந்த பொழுது கூட, நமக்கு மேற்படித் தேவைக்கென, ஒரு கணிசமான பரப்புள்ள வீடே நமக்கு வேண்டியதாக இருந்தது.

சென்னைக்கு வந்தபின் இதுவரை நான்கு வீடுகளில் மாறி மாறி வாடகைக்கே குடியிருப்புகளை அமர்த்திக் கொண்டோம். ஒவ்வொரு வீடு மாறுகையிலும் கால, இட நிலைகளுக்கேற்ப சிறிது கூடுதலான வாடகையும், கூடுதலான முன்பணமும் தர வேண்டியிருந்தன. அந்நிலைகளிலெல்லாம் பொருள் நிலையிலும் இடம் பற்றாத நிலையிலும் பேரிடர்ப் பட்டோம். சில வீடுகளில் வீட்டுரிமையாளர்கள் கொடுத்த பல்வேறு தொல்லைகளுக்கும் ஆளாக வேண்டியிருந்தது.

இவ்வாறு இத்தனை யாண்டுகளாக, இத்துணை இடர்ப்பாடுகள் பட்ட பின்னரே நமக்குச் சொந்தமாக ஒரு வீடு, கட்டாயத் தேவை என்ற உணர்வு ஏற்பட்டது. காலத்தால் அப்படி அமர்த்திக் கொள்ளாததற்கு இப்பொழுது மிகவும் வருந்துகிறேன். உள்ளம், உயிர் நோகின்றேன். இருப்பினும் எனக்கு (நமக்கு இல்லை; தனிப்பட்ட எனக்கு) வீட்டு ஆசை வரவில்லை. இம் மண்ணுலகவீட்டு ஆசைமட்டுமில்லை; விண்ணுலகு என்று ஒன்று இருந்தால், (ஆனால் அவ்வாறு இருப்பதாக இன்று வரை என் அறிவுக்குப் படவில்லை; ஒருவேளை பிறவியற்ற நிலையையே அவ்வாறு உலகியலில் குறிக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டாலும்) நான் பிறவியற்ற அவ்வீட்டு நிலையை — வெறுமனே உயிர் போய் (திருவள்ளுவர் கருத்துப்படி) இறைமையோடு ஒடுங்கி விடுகிற நிலையை நான் என்றுமே விரும்பவில்லை. பிறந்து பிறந்து சாகவே விரும்புகின்றேன். பிறவியற்ற நிலையையே அறிவர்கள் (ஞானிகள்) விரும்புவதாக நாம் நூல்களில் அறிகிறோம்; படிக்கிறோம். ஆனால், அந்நிலை நான் விரும்பாத நிலை.

'பிறவி இனியது; பணிசெயும் தகையது!'

— என்று என் கருத்தை எழுதியிருக்கிறேன். இனி, மண்ணுலக வீட்டுச்சிக்கலுக்கு வருவோம்.

சொந்த வீடில்லாமல், வாடகை வீடுகளில் இருந்து இருந்து நாம் பட்ட தொல்லைகள் கொஞ்ச நஞ்சம் இல்லை. அந்த அந்த வீட்டுக்காரர்கள் நம் அறிவையும் பொதுவுணர்வையும், தொண்டுள்ளத்தையும் மதிக்காமல் அவரவர் வீடு, வாசல்களும், காசுபணங்களுமே பெரிதென்று கருதி, நம்மைப் படுத்திய பாடுகள் இருக்கின்றனவே, அவற்றை இப்பொழுது நினைத்தாலும் என் நெஞ்சு நடுங்குகிறது; அறிவு மழுங்குகிறது; வாழ்க்கையே சப்பென்று ஆகிவிடுகிறது.

இவ்வாறான நிலைகளில் நாம்தாம் நம் தமிழுணர்வை மறக்காமல், இனவுணர்வை மாய்த்துக் கொள்ளாமல், நாட்டுணர்வைக் கைநெகிழ்க்காமல் நம் எல்லாவகையான எழுத்து

ஆராய்ச்சி, பேச்சு, செயல் முதலிய முயற்சிகளையும் செய்ய வேண்டி உள்ளது. என் செய்வது? இனி வீட்டின் புற நிலைகள் இப்படி? அக நிலைகளோ சொல்லித்தீராதவை. அவை பற்றி ஒன்றும் இக்கால் சொல்வதற்கில்லை. காலம் வரும் பொழுது, சொல்ல வேண்டிய தேவை வரும்பொழுது, இவ்வுலகில் மக்களுக்கு உண்மையாய்த் தொண்டு செய்ய விரும்பிய ஓர் அறிஞனுக்கு, ஓர் உண்மைத்தமிழ்ப் பாவலனுக்கு என்னென்ன வகையான அகப்புறத் தாக்கங்கள் நேரும் என்பதை இவ்வுலகுக்கும், இனிவரும் எதிர்கால மக்களுக்கும் தெரிவிக்க வேண்டிய கட்டாயம் வரும் நேரத்தில், அவற்றைப் பற்றியும் சொல்ல விரும்புவோம்.

இனி இத்தகைய சூழ்நிலைகளுக் கிடையில் நாம் இறுதியாகக் கடந்த ஆறு ஆண்டுகளாகத் திருவல்லிக்கேணிப் பகுதியில் இருந்த ஒரு வீட்டின் துன்பச் சூழல்களையெல்லாம் விடுத்து, விட்டு நீங்கி, இக்கால் கடந்த மாத இறுதியில், மைலார்ப்பூர் பகுதிக்குச் செல்ல நேர்ந்த நிலைகள் இங்குத் தவறுமல் குறிப்பிட வேண்டியது மிகவும் இன்றியமையாதது ஆகும்.

திருவல்லிக்கேணிப் பகுதியிலிருந்து மயிலார்ப்பூர் பகுதிக்கு நாம் குடியேறிவிட்டோம் என்பதையறிந்து, தொலைபேசி வழி நம்மிடம் பேசிய, நம் உண்மை அன்பர்களில் ஒருவரும், நம் வாழ்வியல் நலன்களில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட அருளாளரும், நம் அறிவாண்மையை மிகவும் மதித்து ஒழுகும் பேராசிரியரும், அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவரும், ஆகிய, கலைமாமணி, தமிழாகரர், முனைவர் உயர்திரு. ஆறு. அழகப்பனர் அவர்கள், நம் இடப்பெயர்ச்சிக்கு ஒரு பொருள் விளங்கும்படி, ''ஐயா, பாரதியார் வாழ்ந்த திருவல்லிக்கேணிப் பகுதியிலிருந்து, திருவள்ளுவர் வாழ்ந்ததாகக் கருதப்பெறும் திரு மயிலைப் பகுதிக்கு நீங்கள் குடியேறுவது மிகவும் பொருத்தம். இரண்டாவது திருவள்ளுவராக நீங்கள் அங்கே செல்கிறீர்கள்'' என்று சொன்னர்.

அவர் அவ்வாறு குறிப்பிட்டதால், எந்த மன நிறைவும் கொள்ளவில்லை, நாம். வாடகைவீடு வாடகை வீடுதானே! வாடகையோ முந்தய வீட்டினும் மும்மடங்கு! இந்த நிலையில் சிங்கப்பூரிலிருந்து அண்மையில் மறைந்த செல்வர் ஒருவரை நினைத்துப் பார்க்கின்றும். ''ஐயா, நீங்கள் தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையை மட்டும் கைவிட்டு விட்டுத் தமிழுக்காக மட்டும் பாடுபடுங்கள். தங்களுக்கு மிகப் பெரிய ஓர் அச்சகமும், ஒரு பெரிய வீடும் வாங்கித் தருகிறேம்'' என்று பதினைந்தாண்டுகளுக்கு முன்பே, நண்பர் ஒருவர் வழித்தெரிவித்திருந்தார். ஏற்றுக்கொள்ள முடியாத வேண்டுகோளாக அ்து இருந்ததால், ''இந்தப் பிறவியில் அந்தச் செலவு தங்கட்கிராது'' என்று அவரிடம் கூறுமாறு நண்பருக்கு எழுதிவிட்டேன், அப்பொழுது. இவ்வாறு, நம் வாழ்வியல் நலன்களைத் தவிர்த்துவிட்ட, தவற விட்ட நிலைக்ள் பல.

சொந்த வீட்டின் தேவையை உணர்ந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன், திருச்சியில் உள்ள, கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக நமக்கு மிக அன்பாகவும் ஆறுதலாகவும் இருந்த தூய தமிழ் வணிகச் செல்வர் ஒருவரிடம், அக்கால், நாம் குடியிருந்த வீட்டுக்காரர் கொடுத்த கொடுமையான தொல்லைகளை வாய் விட்டு ஒப்பாரி வைக்காத குறையாகச் சொல்லி, அப்பகுதியிலேயே இரண்டு மாடிக் கட்டடமான ஒருவீடு விற்பனைக்கு வருவதாகவும், அதை அவர் பெயருக்கு வாங்கிப் பதிந்து, காலமுழுவதும் நாம் குடியிருக்கக் குறைந்த வாடகைக்கேனும் நமக்கு விட வேண்டுமென்று பலவாறு அழுத்தமாகவும் வேண்டுதலாகவும் நாம் வருந்திக் கேட்டுக் கொண்டதும், அவரும் ஒப்புக்கொண்டு ஆறுதலளித்ததும் ஆன ஒரு நிலை, பின் ஏனோ அவர் அமைதியாகி விட்ட நிலையில் ஒரு கனவாகவே போய்விட்டது.

— இவ்வளவுக்கும் பின்னர், நாம் இரண்டு மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து முயன்று, பலவாறு தேடி, ஏறத்தாழ இருபது முப்பது வீடுகளைப் பார்த்து, வீடுகள் நம் தொண்டுத் தேவைக்குப் பொருத்தமில்லாமலும், பொருத்தமானவை ஓரிரண்டு பொருள்நிலையில் பொருந்திவராமையாலும், மனம் துயருற்ற நிலையில் கிடைத்ததே, நாம் அண்மையில் குடியேறிய மயிலார்ப்பூர் வீடு.

நமக்குப் பொருத்தமான ஒரு வீடு கிடைத்ததில் நாம் எவ்வளவு துயருற்றோமோ, அவ்வளவு துயருற்றோம் அதில் குடியேற. ஏனெனில் நம் வீட்டுப் பொருள்களைப் பொறுத்த அளவில் நமக்கு ஓரிரண்டு அறைகளே உள்ள வீடு நமக்குப் போதும். ஆனால் நம்மிடம் உள்ள ஒரு சிறு நூலகத்தையும் (ஆறேழு பேழைகளைக் கொண்டது.) பல நூற்றுக்கணக்கான பதிவேடுகள், கோப்புகள், காப்புப் பொருள்களையும், பல்லாயிரக் கணக்கான தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இருப்பு இதழ்களையும், ஆயிரக்கணக்கான விற்பனை நூல்களையும், தனித்தனியே சிறு சிறு நூற்றுக் கணக்கான கட்டுகளாகக் கட்டவும், சிறு சிறு அட்டைப் பெட்டிகளில் அடைக்கவும், அவற்றை ஐந்தாறுமுறை மூடு வண்டியில் ஏற்றவும், பின் அவற்றைக் கொண்டுபோய்ப் புதுவீட்டில் மீண்டும் மாடிப்பகுதியில் ஏற்றி வைக்கவும், அவற்றை ஒழுங்கு படுத்தவும் மிகப் பெருமுயற்சி தேவையாயிருந்தது. ஆறேழு பேர் ஆள் துணையும் வேண்டியிருந்தது.

இவற்றுக்கு பொருத்தமாக நம் அன்பர்களும் நம் பெயரப் பிள்ளைகள் ஓரிருவரும் அக்கால் வந்து அவ்வகையில் பேருதவி புரிந்தனர் என்பதை இப்பிறவி உள்ளளவும் நம்மால் மறக்க இயலாது. இவற்றுக் கெல்லாம் ஆள் வைத்தும் கட்டுப்படி ஆகாது.

இவ்வகையில் நம் தென்மொழி அன்பர்கள் நம் மேல் பெருத்த அன்பும் இரக்கமும் கொண்டு ஏறத்தாழப் பதினைந்து நாள்கள் இரவும் பகலுமாக முழுப்பணி செய்து நம் வீட்டையே திருவல்லிக்கேணியிலிருந்து மைலார்ப்பூருக்கு மாற்றிக் கொடுத்த

# இந்தியப் பண்பாடா?
# தமிழ்ப் பண்பாடா?

(இக்கட்டுரை கல்வெட்டு, வரலாற்றியல் அறிஞர் திரு. நடன காசிநாதன் அவர்களால், 'இந்தியப் பண்பாட்டில் தமிழ்நாட்டின் பங்கு' என்னும் தலைப்பில் அக்டோபர் 88, 'கூரியர்' இதழில் வெளிவந்ததாகும். இதில் சொல்லப் பெற்ற கருத்துகள் உண்மையென்றாலும், கட்டுரையாசிரியர் அரசுப் பணியிலிருந்து கொண்டு சொல்வதால், எங்கே தமிழ்த் தொடர்பான முழுவுண்மையைச் சொல்லி விட்டால், தம் பதவிக்குக் குந்தகம் விளைந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சியும், அதே சமயத்தில் மறைக்க முடியாமல் உண்மையைச் சொல்லியே ஆக வேண்டிய ஒரு வரலாற்றுக் கடப்பாட்டுடனும் கூறுவதான ஒரு தடுமாற்றம் தெரிகிறது. அ்து இப்பொழுதைய நிலையில் அவர் போலும் பதவியாளர்க்கு இயல்பானதே! இருப்பின் அவர் கூற வந்த உண்மைகள் முனை மழுங்காமல் உள்ளதால், நம் அன்பர்கள் அவற்றை அறிய வேண்டி இங்கு இக்கட்டுரையை வெளியிடுகிறோம். அவர் கூறவந்த உண்மைகளில் உள்ள நலிவுகளை ஆங்காங்குப் பிறையடைப்புகளில் சுட்டியிருக்கின்றோம். அன்பர்கள் அவற்றைக் கண்டு முழு உண்மையின் வடிவத்தையும் கண்டு கொள்வார்களாக.

— ஆசிரியர்.)

இந்தியாவின் வரலாற்றை ஆராய முற்படுவோமானால், பழைய கற்காலம் தொட்டுத் தொடங்குதல் வேண்டும். அந்தப் பழைய கற்காலம் தொட்டே தென் இந்தியாவின் தெற்கோடியில் உள்ள தமிழகத்திற்கும், வடஇந்தியாவின் வடகோடியில் உள்ள காசுமீரத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது என்பது பண்டைய வரலாற்றினை ஆய்வு செய்யும் அறிஞர்கள் கூறுகின்ற கருத்தாகும். (இங்கு கட்டுரையாசிரியர் இந்தியா என்று இந்நிலப்பரப்பைக் குறிப்பிடுவதும், அதை வட, தென் பகுதிகளாகப் பிரித்துப் பேசுவதும் கற்கால வரலாற்றுக் காலத்திற்குப் பொருந்துமாறில்லை. தமிழகம் அப்பொழுது தென் பகுதியின்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

தனர். அவர்கள், திருவாளர்கள் இளமுருகன், அரசன், செல்வமணி, இளங்கண்ணன், உலகமுதல்வன், முருகன் ஆகியோரும் ம்ந மூத்த மகளின் பிள்ளைகள் செல்வன் தமிழ்ச்செம்மல். செல்வியர் இசைமொழி, அங்கயற்கண்ணி ஆகியோரும். இவர்களின் உழைப்பும் உதவியும் என் உள்ளத்தில் என்றும் நன்றியுணர்வுடன் இருக்கும்.

இவ்வாறு நாம் புதிய வாடகை வீட்டிற்குக் குடிபுகலானோம். இந்நாட்டிலும் நம் தமிழர்களிடையிலும் ஓர் உண்மைத் தமிழறிஞர் குடியிருக்கும் வாடகை வீட்டிற்கு எத்துணை அல்லல் பட வேண்டியிருக்கிறது என்பதை நம் தென்மொழி அன்பர்கள் அறிய வேண்டும் என்பதற்காகவே இதனை இங்கு எழுத வேண்டி வந்தது என்க.

0

தென் கோடியில் மட்டும் இல்லை. இந்தியா முழுமையும் தமிழர்கள் அல்லது முன் தமிழர்களே (இவர்களை வரலாற்றாசிரியர்கள் முன்திராவிடர்கள் (Proto Dravidians) என்று தவறாகவே குறிப்பர்.) வாழ்ந்திருந்தார்கள் என்பது மெய்வரலாறு. கற்காலத்தில் ஆரியர் நுழைவு இல்லை. கி.மு. 3000-க்குப் பின்னரே ஆரியர் நுழைவு உண்மையால், அக்காலத்திற்கு முன் காசுமீரம் மட்டுமன்று சுமேரியா வரையில் தமிழர்களே வாழ்ந்திருந்தார்கள் என்பதற்கு அசைக்க முடியாத சான்றுகள் உண்டு. எனவே காசுமீரத்திற்கும் தமிழகத்திற்கும் ஒரு தொடர்பு இருந்ததாகக் கூறுவது, இக்காலத்திற்குதவும் ஒரு கருத்துப் போற்றுதல் (ஓர் உபசார) வழக்கே ஆகும். இதில் பகுதி உண்மையே கூறப்பெறுகிறது. முழு உண்மையும் அஃதாவது அன்று கன்னியாகுமரி முதல் காசுமீரம் வரை தமிழர் கலை பண்பாடுகளே பரவியிருந்தன என்றும், இப்பொழுதும் அவையே சிற்சில ஆரியக்கலை, பண்பாட்டுக் கலப்பு நிலையில் உள்ள தமிழரின் கலை, பண்பாடுகளே என்றும், அவைதாம் இன்றைய மயங்கிய நிலையில் பாரதப் பண்பாடு, இந்தியப் பண்பாடு என்றெல்லாம் திரித்தும் திசைத்தும் பேசப் பெறுகின்றன என்றும் கட்டுரை ஆசிரியர்க்குத் தெரியும் என்றாலும், அவற்றை அவ்வாறே கூறுவது தம் பதவிக்கு ஏதம் தரலாம் என்பதால், இவ்வாறு நலித்தும் சலித்தும், மறைத்தும், குறைத்தும், அஞ்சியும், அடங்கியும் கூறுகிறார் என்றறிக. ஆனால் வரலாற்றாசிரியர்க்கு இம் மழுங்கல் நிலைகளும் அழுங்கல் மனவுணர்வுகளும் தேவையில்லை என்பதையும் கட்டுரையாசிரியரும் அவர் போலும் தமிழின வரலாற்றாசிரியர்களும் உணர்தலும் உரையிற் கொணர்தலும் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.)

தமிழகத்தின் வடபகுதியான செங்கழுநீர்ப்பட்டு (செங்கற்பட்டு) மாவட்டத்தில் உள்ள அத்திரம்பாக்கம் என்னும் இடத்தில் பெருமளவில் காணப்பெறும் பழங்கற்காலக் கருவிகளின் உருவங்களிலும் காசுமீரத்தில் உள்ள சோகான் பள்ளத்தாக்கில் கிடைக்கப்பெறும் பழங்கற்காலக் கருவிகளின் உருவங்களிலும் சில ஒற்றுமைத் தன்மைகள் காணப்படுகின்றன. இவ்வொற்றுமை அக்காலத்தில் தமிழகத்தின் பண்பாடும், காசுமீர தேசத்தின் பண்பாடும் ஒருங்கிணைந்து இருந்தன என்பதை நமக்குப் புலப்படுத்துகிறது. (ஒன்றாகவே இருந்தன என்று சொல்லத் தயங்குகிறார். அச்சம் போலும்!) இத்தன்மை கலை, பண்பாட்டுத் தாக்குதலால் ஏற்பட்டிருக்கலாம் என்று உய்த்துணரப்படுகிறது. (பண்பாட்டுத் தாக்கம் என்ற கூற்றுக்கேஇட மில்லை. ஒரே தமிழர் பண்பாடாக இருந்தது என்பதே உண்மை!)

கற்கால வரலாற்றையடுத்து நாம் அறியக்கூடியது மொகஞ்சதாரோ (முகைந்ததரை - (மறைந்தநிலம்) என்னும் தமிழ்ச் சொல் பிராகிருத (வடதிராவிட) முறையில் திரிந்த வடிவம்.) அரப்பா (ஆற்றுப்படுகை என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபாக இருக்கலாம்.) நாகரிக வரலாறேயாகும். மொகஞ்சதாரோ, அரப்பா

நாகரிகத்தின் சொந்தக்காரர்கள் திராவிடர்களின் (தமிழர்களின்) முன்னோர்கள்(Proto Dravidians) என்று பின்லாந்து, மற்றும் உருசிய அறிஞர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்திய நாட்டின் மேற்குப் பகுதியான பலுச்சித்தானத்தின் ஒரு பகுதியில் வாழும் மக்கள் பிராகுயி என்னும் மொழியினைப் பேசுவதாகவும், அம்மொழி திராவிட (தமிழ்திரிந்த) மொழியினைச் சார்ந்தது என்றும் ஆராய்ச்சி வல்லுநர்களால் கூறப்படுகிறது. அவ்வாறுனால் திராவிடர்(தமிழர்)களின் முன்னோர்கள் மொகஞ்சதாரோ, அரப்பா, பலுச்சித்தானம் போன்ற பகுதிகளில் வாழ்ந்திருக்கிருர்கள் என்பது தெரியவருகிறது.

திராவிடர் (தமிழர்)களின் முன்னோரின் திட்டமிடப்பட்ட நகர அமைப்பு, தூய்மைகாத்தல், நலஅடிப்படை (சுகாதாரம்) பேணுதல், சிவன் வழிபாடு, தாய்வழிபாடு போன்ற பல பண்பாட்டுக் கூறுகளை நாம் மொகஞ்சதாரோ, அரப்பாவில் காண முடிந்துள்ளது. அவர்களுடைய அந்தக்கலை, பண்பாட்டுத் தன்மை பிற்காலத்தில் அப்பகுதியிலும், அதனையொட்டிய வடஇந்தியப் பகுதியிலும் தாக்கி (பரவி — என்று கூறியிருக்க வேண்டும்) முழுமை பெற்றிருக்கிறது என்பதைப் பிற்காலத்தில் அங்கு வந்து குடியேறிய ஆரியர் நாகரிகத்திலும் மற்றும் பிற பிற்கால மன்னர்களுடைய நாகரிகங்களிலும் கண்டுணர முடிகிறது. (இவ்விடத்தில், ஆரியர் நாடோடிகளாதலின் அவர்களுக்கென்று தனி நாகரிகம் என்பதே இல்லை என்பதைக் கட்டுரையாசிரியர் விதந்து கூறவில்லை. ஆரியர்கள் எங்கெங்குச் சென்றுர்களோ அங்கங்குள்ள நாகரிகத்தையே பின்பற்றியுள்ளனர் என்பதை நாம் உணர்தல் வேண்டும். ஐரோப்பா சென்ற ஆரியர்கள் ஐரோப்பிய நாகரிகத்தையும், இந்தியா வந்த ஆரியர்கள் இங்கு அக்கால் செழித்துப் பரவியிருந்த தமிழர் நாகரிகத்தையும் பின்பற்றியிருந்து, பின்னர் காலப்போக்கில் அவற்றையே தங்கள் நாகரிகமாகவும், ஆங்காங்குப் பேசப் பெற்று வந்த மொழிகளையே தங்கள் மொழியினின்று தோன்றி வளர்ந்த மொழிகளாகவும், ஆங்காங்கு நடைமுறையிலிருந்து வந்த சமயங்களையே தங்கள் சமயங்களாகவும் வரலாறறியாப் பொது மக்களிடம், தலைமாற்றிக்கூறி இன்றுவரை பெருமையும் ஆளுமையும் பெற்று வருகின்றனர் என்னும் வரலாற்றுண்மையை மறுக்கவும் இயலாது; மறைக்கவும் முடியாது — என்பதை உணர்தல் வேண்டும். இதனை திரு. நடன. காசிநாதன் போலும் அரசுப் பணியில் உள்ள வரலாற்றுசிரியர்கள் சொல்லவும் இயலாது; சொல்லவும் மாட்டார்கள் என்பதையும் நாம் உணர்தல் வேண்டும்.)

ஆரியர்களின் கருவூலங்கள் என்று கருதப்படும் நான்கு வேதங்களிலும் திராவிடர் (தமிழர்)களின் கலை, பண்பாடுகளினுடைய தாக்குதல் காணமுடிகிறது என்று வேதங்களை நுணுகி ஆய்ந்த மொழிவல்லார் தெரிவித்திருக்கின்றனர். (தாக்குதல் என்று கட்டுரையாசிரியர் குறிப்பிட்டாலும் ஆக்குதல் என்ற சொல்தான் அந்த நிலைக்குச் சரியான பொருத்த

மாக அமைய முடியும். ரிக் என்னும் முதல் வேதத்தின் சில எழுதப்பெறாத பாடல்களுடன் இந்தியா வந்த ஆரியர், தமிழரிடம் கலந்த பின்னர் அவற்றை விரித்து முழுமையுற எழுதியும், அதனினும் பின்னர் ஒரு வேதத்தை நான்காக விரித்தும் சேர்த்தும் பலவாறு திருத்தம் செய்து கொண்டதும், வேத இறுதியில் உபநிடதங்கள் என்னும் மெய்யறிவு நூல்களை புதியனவாக எழுதிச் சேர்த்துக் கொண்டதும், அவ்வேதங்களில் உள்ள சில பகுதிகளை எழுதினவர்களாகவும், உபநிடதங்களில் பலவற்றை வெளிப்படுத்தினவர்களாகவும் தமிழ்முனிவர்கள் குறிக்கப் பெற்றிருப்பதினின்று தெரிய வருகின்றன. ஏற்கனவே இருந்த நிலை, இன்னொன்றால் மாறுதல் அடைவதையே தாக்கம் என்று கூறுதல் பொருந்தும். ஒன்று இல்லாதிருந்து ஒன்று புதிதாகத் தோன்றுவதும், இருந்த ஒன்றினோடு வேறுசில புதியவாக சேர்வதும் ஆக்கம் என்றே கூறப்பெறுதல் வேண்டும். இவ்வளவு நுண்ணிய வரலாற்றுண்மையை காலத்திற்கோ, பதவிக்கோ, அரசுக்கோ அஞ்சியவர்களாலும் அவற்றைத் தம் நலத்திற்காகக் கெஞ்சியவர்களாலும் கூறுவது இயலாததே!)

குறிப்பாக, ரிக் வேதத்தில் சில திராவிடச் சொற்களை இனம் கண்டு, பர்ரோ மற்றும் எமனோ என்னும் மொழிநூல் வல்லுநர்கள் தெரியப்படுத்தியிருக்கின்றனர். மயில், களம், வலம், பழம் முதலிய திராவிடச் சொற்களில் — (திரு. காசிநாதன் இவற்றை ஏன் திராவிடச் சொற்கள் என்று குறிப்பிடுகிறாரோ தெரியவில்லை. வெட்ட வெளிச்சமாகத் திட்ட வட்டமாக இவை தூய தமிழ்ச் சொற்களாகத்தெரியும் பொழுது, இவற்றை ஏன் திராவிடச் சொற்கள் என்று கூறுதல் வேண்டும்? மேலும் பர்ரோ, எமனோவிற்கு பின்னர் தமிழியல் மொழியாய்வும் சொல்லாய்வும் மிக விரிவடைந்து, வேதங்களில் ஏராளமான தமிழ்ச் சொற்கள் மண்டியிருப்பதைப் பாவாணர், அருளி முதலிய சொல்லாய்வறிஞர்கள் பலரும் கண்டு காட்டியிருக்கின்றனரே!) — இருந்து எழுந்த ஆரியச் சொற்களை — (ஆரியச் சொற்கள் என்று இவர் கூறுவது பெரும்பாலும் சமசுக்கிருதச் சொற்களே. சமசுக்கிருதத்தை ஆரியமொழி என்று சொல்லுதல் கூடாது. வடமொழி என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் ஆரிய மொழி என்பது ஆரியர் இந்தியா வரும்பொழுது பேசி வந்த வேத மொழியே ஆகும். வேதமொழி சமசுகிருதத்தில் ஐந்தில் ஒரு பங்கே!) — ரிக் வேதத்தில் அவர்கள் இனம் கண்டு கூறியுள்ளனர். மேலும் ஏலம், பல்லி, புற்று, மலை, நீர், மாலை முதலிய திராவிடச் சொற்களில் (ஏன்தாம் தமிழ்ச் சொற்கள் என்று கூறத் தயங்குகிறாரோ தெரியவில்லை.) இருந்து எழுந்த அரிய சொற்களை பிற வைதீக நூல்களிலும், இதிகாசங்களிலும் தெரிவித்துள்ளனர். ஆதலால் திராவிடர்களின் கலை பண்பாடு ஆரியர்களுடைய கலை, பண்பாட்டுடன் ஒன்றி இணைந்து இருக்கிறது என்பதை நாம் கண்டுணர முடிகிறது. (மீண்டும் அதே பிழையைச் செய்கிறார், கட்டுரையாசிரியர்!)

(தொடரும்)

முன்னிதழ்த் தொடர்ச்சி : தொடர் : 2

# தமிழர் வாழ்வில் தாலி தேவையா?

- திருவாட்டி: திருமுல்லை. கோலாலம்பூர்.

## தந்தை பெரியாரின் புரட்சி :

தமிழர் வாழ்வில் மூடத்தனமும், இழிவும் அருவருப்பான சடங்கு வழக்கங்களும் மலிந்து கிடப்பதை அறிஞர்கள் பலர் அறிந்தும், உண்மையைச் சொல்ல இயலாமல் தந்நலம் கருதி வாளாவிருந்தனர்.

இந்நிலையில் உண்மையை மக்கள் அறியவேண்டும் என்ற கருத்தில் மிகத் துணிவாகப் பல புரட்சிகளைச் செய்தார் தந்தை பெரியார். அவர் கொண்டு வந்த புரட்சியான திட்டங்களில், மாற்றம் பெற்றவற்றில் திருமணமுறையும் ஒன்று.

பெண்களை இன்பநுகர்ச்சிப் பொருளாக வைத்திருக்கக் கூடாது; அடிமைகளைப் போல் கருதக்கூடாது என்று கூறிய தந்தை பெரியார், 'மாங்கல்ய தாரணம்,' 'விவாகம்' — கல்யாணம் — போன்ற பொருளற்ற சொற்களையும் அல்லாது, திருமணம் என்ற சொல்லையும் நீக்கி 'வாழ்க்கை ஒப்பந்தம்' என்று கூறுமாறு பணித்தார். வாழ்க்கை ஒப்பந்தம் என்ற சொல் பகுத்தறிவுக்குப் பொருந்திய சொல்லாகத் திகழ்கிறது.

'கணவன் மனைவி என்று சொல்லாதீர்கள். துணைவன் துணைவி-என்று கூறிச் சம உரிமை தாருங்கள். சமஉரிமைக்கு - எடுத்துக் காட்டாகப் பெண்ணுக்கு மட்டும் 'மாங்கல்யம்' கட்டும் முறையை அகற்றுங்கள். எவரும் எவருக்கும் அடிமையாக வாழக் கூடா'தெனப் பணித்தார்.

ஐயரை வைத்துச் சமசுக்கிருதத்தில் மானங்கெட மந்திரம் ஓதுவதைத் தடுத்துப் பகுத்தறிவுக்கு ஏற்ற வாழ்க்கை ஒப்பந்த முறையைக் கொண்டு வந்தார்.

சொல்லொன்று செயலொன்றாய் வாழும் தலைவர்களைப் போலன்றி, தம் துணைவியாரின் தாலியையும் அகற்றினார். தாலியில்லா வாழ்க்கை ஒப்பந்தங்களைத் திராவிடர் கழகத்தினர் செய்யத் தலைப்பட்டனர். தமிழ்நாட்டு மக்களிடையே ஒரு புதிய திருமணமுறை உருவாகிப் பரவத் தலைப்பட்டது. தாலியைப் பல பெண்கள் அகற்றி எறிந்தனர்.

## தாலியின் தன்மை, பெருமை என்ன?

தாலி பெருமை மிக்கது; (மாங்கல்யம் மகிமை மிக்கது) அதற்குத் தனித்தன்மை உண்டு என்பதோடல்லாமல் காலவலிவு (மாங்கல்ய பலம்) நிலைக்க சிலவகைப் பூசைகளையும் செய்ய வேண்டும் என்று பெண்களே கூறித் திரிகின்றனர்.

அடிமைப்பட்டயத்தைத் தாம் அணிந்து கொண்டது மட்டுமின்றித் தாலிக்குச் சப்பை கட்டு வேறு கட்டுகிறார்கள். இனி — தாலியின் தன்மையைப் பார்ப்போம்.

Scanned with CamScanner

தாலி கட்டிய மறுகணமே ஆசைக் காதலன் அதிகார புரியின் கோமானுகின்றன். அவன் பெற்ரேர் பெண்ணின் — தலைவராகவும் (எசமானராகவும்), அவனின் உறவுக்கு இவள் குற்றேவல் செய்யும் பணியாளராகவும் மாறுகின்ருள். இது மறுக்கமுடியாத உண்மை. இந்த உண்மையின் உறுதிப்பட்டயமே கழுத்தில் தொங்கும் தாலி. அதன் பெருமை மிக்க பொருளடக்கம் அதுவே.

க்ணவனல் கைவிடப்பட்ட ஏழைப்பெண்களின் கண்ணீர், புகுந்த வீட்டில் மாட்டினும் கேடாய் உழைக்கும் பெண்களின் நெட்டுயிர்த்த பெருமூச்சு மகற் கொடை (வரதட்சிணை)க் கொடுமையால் வாழாவெட்டியாக வாழ்வைக் கழிக்கும் பாவையரின் அவலப்பார்வை — தீயூட்டப்பட்டுக் கரிக்கட்டையாகக் கிடக்கும் கட்டிளம் பெண்களின் இமையற்ற கண்ணின் வெறித்த நோக்கு — காலங்காலமாகக் காலனின் மடியில் வீழ்ந்த பேதைகளின் துயர முடிவுகளை இந்தப் பெருமை மிக்க தாலி மாற்றியதில்லை.

தாலியில் பெருமை (மகிமை) உண்டா?

காலங்காலமாக நம் முன்னேர் காணுத பெருமையை இந்த அறிவியல் புரட்சிக் காலத்தில் நமது பெண்கள் இந்தத் — தாலியில் கண்டுபிடித்துவிட்ட வியப்பு (அற்புதம்) நீராவியில் பிட்டு செய்யும் வியப்பிலும் மேம்பட்டதே!

அடகுக்கடையில் வைக்கப்பட்டுத் திருப்பப்படாமல் மூழ்கும் 'மாங்கல்'யங்கள் உருக்கப்படுகையில் அதில் பெருமை எந்த அளவிற்கு நிலைத்து நிற்கிறது?

மஞ்சள் கயிருனுலும் பொட்டுத் தங்கம் இருக்கும் — எனத் திருடன் அறுக்கையில் தாலி வலிமை (மாங்கல்ய பலம்) என்னுகிறது?

சினத்தில் கழற்றி வீசப்படும் தாலி (மாங்கல்யங்)கள் சீரழிந்து தெருவில் விழுகின்றபோது அதன் பெருமையும் மாட்சியும் என்ன ஆகின்றன?

மணவிலக்குக்காக வழக்குமன்ற மிசைகளில் கழற்றி வைக்கப்படும் 'மாங்கல்யங்'கள், தங்கள் பெருமையை அந்த — நடுவருக்குக் கூறியதுண்டா?

எழில்மிகு 'சின்ன'வீடுகளின் கழுத்தில் பெருமை மிக்க — தாலியைத் தன் மணவாளன் கட்டுவதை எந்த 'பெரிய' — வீட்டுக் கழுத்துத் தாலியாவது தன் பெருமையால் தடுத்ததுண்டா?

காலத்தின் கோலத்தால் கட்டழகு குறையுமுன்னரே — புது மலர் நாடும் ஆண் வண்டுகளின் போக்கை இந்தப் பெருமை மிக்க 'மாங்கல்யங்'கள் தடுத்து நிறுத்தியது உண்டா?

'மாங்கல்ய'த்திற்கு வலிவு உண்டென்ருல், நாட்டில் — முண்டச்சிகள் என்று பழித்துக் கூறப்படும் கைம்பெண்கள் நிறைவது ஏன்?

Scanned with CamScanner

கயவரால் கற்பழிக்கப்படும் போது பெருமை மிக்க — 'மாங்கல்யம்' அவன் மார்பைப் பிளக்காதது ஏன்?

நேரம் காலம் பார்த்து வேதியர் மந்திரம் ஓத, அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, முப்பது முக்கோடி தேவர்களும் சான்ருக, சோமன், கந்தருவன் 'அக்கினி'க்கும் மனைவியாகி அந்த முன்னுள் கணவர்கள் வாழ்த்த, மணமகன் உயிர் வாழக் கட்டப்பட்ட 'மாங்கல்யம்' 'மகிமை' பொருந்தியது என்ருல் — திருமணமான சில காலத்திலேயே மணமகள் கைம்பெண் ஆவது என்?

தீர்க்கமுடியாத நோயால் கடைசி மூச்சு இழுக்கும் — கணவனை எந்த 'மாங்கல்ய' 'மகிமை'யாவது காத்ததுண்டா?

'மகிமை' பொருந்திய 'மாங்கல்ய'த்தை மஞ்சள் ஊட்டி — மனத்தால் வருத்திக் கண்ணிலொற்றி வாழ்ந்தால் மணாளனின் வாழ்வு நலமுறும் நீடிக்கும் என்ருல் — மாங்கல்யம் கட்டாத துணைவர் எல்லாம் சின்னுள் வாழ்வில் போய்விடவேண்டுமே. உலகில் வேறு எந்த இனமும் தாலி கட்டுவதாகக் கதைகூட இல்லையே — அவர்கள் கணவர் எல்லாம் என்ன ஆவார்கள். சிறிதாவது சிந்தித்தால் மேற்கண்ட கருத்தையெல்லாம் பெண்கள் நாளிதழுக்கு எழுதுவாரா?

அவர்கள் எழுதுவது சரியென்ருல், இந்த ஆண்கள் — எல்லோரும் தங்கள் கழுத்திலும் 'மாங்கல்ய'த்தைப் போட்டுக் கொண்டு, மஞ்சள் தடவி மந்திரம் கூற மனைவி நீண்ட நாள் உயிர் வாழ உதவலாமே! — மேற்கண்ட மூடத்தனமான கருத்துகளை ஏற்கிற பெண்களின் கணவர்களாவது அவ்வாறு செய்வார்களா?

எங்கும் ஆணுக்கு ஒரு நெறி — அறியாமைக்கு ஒரு நெறி. — பெண்ணுக்கு ஒரு நெறி — பகுத்தறிவுக்கு ஒரு நெறி. நேர்மைக்கு இடம் தருவதில்லை — உண்மைக்கு மதிப்பும் இல்லை. சான்றுகள் இல்லாத சாக்காட்டுக் கதைகள் — ஆட்சிக் கட்டிலில் அதிகாரம் செலுத்துகின்றன.

திருமண மந்திரம் :

மணமகன் மணகளின் கழுத்தில் தாலி கட்டும் போது ஐயர் கூறுகின்ற மந்திரம் இது —

''மாங்கல்யம் தந்துநானேன
மமஜுவன கேதுநா''

''எனது உயிர் நீண்ட நாள்வாழ வேண்டி இந்தத் தாலியை (மாங்கல்யத்தை) (உன்கழுத்தில்) கட்டுகிறேன்.''

என்ன ஓரவஞ்சகம்! என்ன தன்னலம்! இதையே (மந்திரத்தை) சொல்லி பெண் ஒரு மாங்கல்யத்தை மணமகன் கழுத்தில் கட்டினுல் என்ன?

தாலியின் தேவைதான் என்ன?

தாலி அணிவது ஏன் என்ருல் பாதுகாப்பு, என்கின்றனர். 'தாலி வேலி' என்கின்றனர். 'தாலி பெண்ணுக்கு வேலி' என்று -

கலைவாணர் பாடிவிட்டாராம்: அவருக்கே ஒரு தாலி போட்டிருந்தால் அது வேலியாகி மதுரம் அம்மையாரைத் தடுத்திருக்கும் அல்லவா?

தாலி வேலி என்றால் உங்கள் முப்பாட்டியும் முன்னோரும் தாலி போடவில்லையே. அந்த வேலியற்ற பயிரை எந்த வெள்ளாடு மேய்ந்ததாம்?

தாலி அணிந்த பெண்களைத் தீயவர்கள் அணுக மாட்டார்கள் என்றால் — தமிழ் ஆணினமே வெட்கித் தலை குனியவேண்டியதுதான். உலகத்திலுள்ள தமிழரல்லாத ஆண்கள் அனைவரும் நல்லவர்கள் ஆகிவிடுகிறார்கள்.

தாலிதான் பாதுகாப்பு என்றால் கன்னிப் பெண்கள் தாலி கட்டிக்கொள்ள வேண்டியதுதான். கைம்பெண்கள் (விதவைகள்) கழுத்திலும் தாலி தொங்கலாமே; தமிழ்க்கயவர் (அயோக்கியர்கள்) தாலியைக் கண்டதும் பதுங்கிவிடுவர்; அப்படித்தானே! ஆனால் தாலியணியாத என் போன்ற எத்தனையோ பெண்கள் தொல்லைக்கு ஆளாகவில்லையே! அ'து ஏன்? அல்லது தாலியணிந்த பெண்கள் பலர் ஆங்காங்கே தொல்லைக்கு ஆளாகிறார்களே, அ'து ஏன்?

ஒழுக்கத்தை உறுத்திக் காட்டுவது தாலி என்றால் — தாலியை ஆண்கள்தாம் அணியவேண்டும். கோவலன் கழுத்தில் தாலி இருந்திருந்தால் அவன் மாதவியை நாடிப் போயிருக்க மாட்டான். என்ன செய்வது? கண்ணகியே அன்று தாலி கட்டிக் கொள்ளவில்லை. தாலி இல்லாத கண்ணகி வேறு ஒரு மாதவனை நாடிப் போகவில்லையே!

தாலியால் ஒழுக்கம் வருவதும் இல்லை; போவதும் — இல்லை; இதற்கு விளக்கமும் தேவையில்லை;

மூன்று முடிச்சு (மெய்ம்ம்ம்) தத்துவம்!

தாலியின் மூன்று முடிச்சுக்கு இலக்கணம் கூறுகிறார்கள் — புதிய பவனந்தி முனிவரும்! தொல்காப்பியரும்! "தெய்வத்திற்கு ஒரு முடிச்சு; கணவனுக்கு ஒன்று; குமுகத்திற்கு ஒன்று — என்று கட்டுப்பாடுகளைக் காட்டவே" என்கின்றனர்;

கட்டுப்பாடுகள் என்றால் கணக்கற்ற முடிச்சுகள் போட வேண்டும். தெய்வத்தை விட வலிமை மிக்க அரசியல் சட்டத்திற்கு ஒரு முடிச்சை ஏன் மறந்தனர்? அது போகட்டும் கணவன் முடிச்சு போக, மாமியார் முடிச்சு, மாமனார் முடிச்சு, நாத்தனார் முடிச்சு எல்லாம் என்னாவது?

அடிமை கூட ஆண்டை (எஜமானனு)க்கே கட்டுப்படுவான். ஆனால் பெண் அனைவருக்கும் கட்டுப் பட்டே நடக்க வேண்டிய ஒரு பிறவியாய் உள்ளாளே!

வள்ளுவர் மட்டுமென்ன? பெண்ணுரிமையைப் பற்றியா குறள் எழுதியுள்ளார்.

Scanned with CamScanner

''தற்காத்துத் தற்கொண்டான் பேணி தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்''

என்று பெண்ணின் கடமைகளைத் தெளிவாகச் சொல்கிறார். ஆணுக்கும் இதே போல் ஏன் சொல்லவில்லை? நல்லவேளை! அவர் காலத்தில் தாலி திருமணத்தில் கட்டும் வழக்கம் இல்லை. இருந்திருந்தால், அதைப் பற்றி ஓர் அதிகாரம் போட்டிருப்பார்.

நாகரீகத்தில் தமிழர்களைப் போலவோ அல்லது சிறிது மேம்பட்டோ, குறைவுபட்டோ வாழ்ந்த எகிப்திய, — உரோமானிய, அபிசீனிய, சீன, கிரேக்க மக்கள் கண்டுபிடிக்காத — நாகரீகம் அறிவாற்றல் அனைத்திலும் தமிழர்களை — விட (திருப்திக்காக — ஏதோ ஓரளவு) முன்னேறிவிட்ட ஆங்கில செருமானிய, அமெரிக்க, சப்பானிய மக்கள் கண்டுபிடிக்காத — வியப்பை (அற்புதத்தை) இந்த 'மாங்கல்யத்'தில் — அதுவும் ஐந்நூறு ஆண்டுகளுக்குள் பரவிய 'மாங்கல்யத்'தை — அந்தக் காலக்கட்டத்தில் — முகலாயர் முதல் ஆங்கிலேயர் முதலான பல்வேறு இனத்தாரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த தமிழர் — எவ்வாறு கண்டு பிடித்திருப்பர் என்பதைப் பார்ப்போம்!

எடுத்துக்காட்டாக குங்குமம் நெற்றிப் பொட்டில் அழகுக்காக வைப்பது தமிழர் வழக்கமே. இப்பொழுது அதற்கும் 'தத்துவம், வந்து விட்டது. ''கொங்கை முன்றில் குங்குமம் — எழுதாள்'' என கோவலனைப் பிரிந்த கண்ணகி துயர் பட்டதை விளக்க, இளங்கோவடிகள் எழுதியுள்ளார். இது பண்டைத் தமிழப் பெண்களின் வழக்கமாக இருந்தது. அவ்வழக்கம் இன்றில்லை. இருந்தால் அதற்கும் 'தத்துவம்' வந்திருக்கும். — ஆனால் அவர்கள் எக்காலத்தும் நெற்றி வகிட்டில் குங்குமம் வைக்கவில்லை.

இபொழுது பத்து ஆண்டுக்காலத்திற்குள்ளாக, நமது — 'உயர்ந்தோர் ஏற்றிய உரைசால் பத்தினியர்' — வகிட்டில் குங்குமம் வைக்கத் தலைப்பட்டு விட்டனர்.

வடநாட்டுப் பெண்கள் வைப்பது வழக்கம். அதற்கு அருவருப்பான காரணம் உண்டு. நமது அறிவுத் திலகங்களுக்கு எக்காரணமும் தெரியாது. வடக்கத்தி சிவப்புநிறப் பெண்கள் வைத்தார்கள் — பிறகு பார்ப்பனத்தியர் வைத்தனர். — படத்தில் (சினிமாவில்) வைத்தனர் — நாமும் முன்னேற — அவர்களைப் போல் வகிட்டில் வைத்துவிடுவோம் குங்குமத்தை என்று வைக்கிறார்களே தவிர வேறு ஏதும் இல்லை. தலையில் வைக்கத் தேவைப் படுவது அறிவு. அது குங்குமம் போல் எளிதாகக் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் நம் பெண்களுக்குத் தேவையில்லை. — இனி வகிட்டில் குங்குமம் வைக்கும் வழக்கம் தோன்றிய வழியைக் கூறுகின்றேன்.

வட நாட்டில் பெண் ஒருத்தியை ஒருவன் மணந்தால் அவனுடைய உடன்பிறந்தவர்கள் (சகோதரர்கள்) அனைவரும் நுகர்வது (அனுபவிப்பது) வழக்கம். பஞ்சபாண்டவர் கதை போல.

இந்த நிலையில் அவள் வீட்டு விலக்காகி இருக்கின்ற — நேரத்திலாவது தொந்தரவு செய்யப்படாமல் இருக்க வேண்டுமே என்பதற்காக, — அவள் தனது 'உதிர'த்தை எடுத்து வகிட்டில் அடையாளமாக வைத்துக்கொள்வாள். ஏன் வகிட்டில் — வைக்கிறாள் என்பதற்கும் விளக்கம் உண்டு. அ'து இங்குத்தேவையில்லை.

அந்த 'உதிர' அடையாளத்தைப் பார்த்த பின் கணவர்கள் — தொல்லை தரமாட்டார்கள்.

பிற்காலத்தில் பெண்,பிள்ளை பெறும் தகுதி உடையவள் என்பதைக் காட்ட 'உதிரம்' அடையாளமாக வைக்கப்பட்டதாகவும் விளக்கம் உண்டு.

ஏன் இந்த வழக்கம் எழுந்தது என்பதை அறியாத நமது அறிவுத் திலகங்கள், (பதிவிரதா தன்மையைக்) கணவன் பற்றை காட்டுவதாகக் கருதிக் 'குங்கும'த்தை வகிட்டில் வைக்கிறார்கள்.

இந்த விளக்கத்தைப் படித்து விட்டு, வகிட்டில் சிவப்புக் 'குங்கும'த்தைப் பார்த்து ஏனம்மா — வீட்டு விலக்கா?' என்று கேட்டுவிடாதீர்கள். இவ்வளவு அப்பட்டமாக நான் எழுதுவது நமது குமுகத்தில், பத்தாண்டுக்குள்ளாகத் தொற்றிக்கொண்ட இந்த மூடப் பழக்கத்தை முறியடிக்கவே.

பொதுவான பெண்கள்தாம் இவ்வாறு என்றால், பகுத்தறிவு இயக்கத் தலைவிகள், பகுத்தறிவுப் பேச்சாளினிகள் தலைகளிலும் வகிட்டில் வைக்கப்பட்ட குங்குமத்தைக் காணலாம். இந்தத் தலைவியரே இப்படி என்றால் — பகுத்தறிவுக் கழகக் கவரிமான்களின் மனைவியர் தலையைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. தொங்கும் தாலியும், வகிட்டில் அடித்த சிவப்பும் மிகவும் நேர்த்தியான கண்கொள்ளக் காட்சியாகும்.

பத்து ஆண்டுகளில் பரவிவிட்ட இந்த அருவருப்பான — வழக்கம், தாலி போல் இன்றியமையாததாக்கப்பட்டுவிடும். பிறகு 'மகிமை'யும் நம் மாணிக்கங்களால் கற்பிக்கப்படும்.

மூடத்தனம் என்பது வேறு. ஆனால் தன் கணவன்பற்றை (பதிவிரதாத் தன்மையை)ப் பிறர் அறிந்துகொள்ளப் போடும் புனைவு (வேடம்) என்பது வேறு. அத்தனை அளவு கணவன் பற்றுப்புனைவெல்லாம் போட்டுப் — பின் கணவனை விளக்குமாற்றால் விள்ாசவும் வேண்டாம். —கணவன் மேல் உண்மையான அன்பைச் செலுத்துங்கள். குடும்பத்தில் இன்பம் பெருகும். ஊர் மெச்சும் நாடகம் வேண்டாம்.

தாலியறுப்பு :

தாலியறுப்புச் சடங்கிற்கு, பெண்ணை வாழ்வரசிபோல் உடுத்தி, அழகுசெய்து மஞ்சள் பூசி, பொட்டுவைத்து — பூச்சூட்டி — பின் தாலி முதல் அனைத்துப் புனைவுகளையும் — நீக்கி; பூவை அகற்றிப் பொட்டையும் அழிக்கும் கொடுமையைச் சிறிது எண்ணிப் பாருங்கள். இதில் ஏதாவது விடுபட்டாலும் அங்கு இருக்கும் வேறொரு கைம்பெண் (விதவை), விட்டுக்கொடுக்க மாட்டாள்.

(தொடரும்)

# விலை கொடுக்க வேண்டும்.

பாவலர் தமிழ்க்குமரன். ஈரோடு !

விலை கொடுக்க வேண்டும் — நாமும்
விலைகொடுக்க வேண்டும் !
விடுதலைப் புலிகளைப் போல — நாமும்
விலை கொடுக்க வேண்டும் !

வெற்றிலை பாக்குத் தட்டத்தில் வைத்து
விடுதலைச் சீரைத் தரமாட்டார்கள்.
பெற்றிட வேண்டின் பேணி உரிமையைப்
பிழைபுரி யாமல் பீடெழுந் தார்த்து (விலை)

விட்டில் பூச்சி விளக்கினை மொய்த்துயிர்
விடுதல் மடமை! விலங்கா மாந்தர்?
பொட்டுப் பூச்சியா? புன்மைத் தேரையா?
பொங்கி யெழுந்து போராடிவிடுதலைக்கு (விலை)

அக்கா அக்கா அக்கா என்றே
அழைக்கின் ருயே கிளியே நீயும்
அக்கா வந்து கொடுப்ப தற்குச்
சுக்கா மிளகா விடுதலை என்பார் ! (விலை)

ஆண்மை சிலிர்த்தே எழுந்து தமிழர்
அடிமை விலங்கை யொடித்து நிமிர
வேண்டும்! கொள்கை மேருவாய் நிமிர்ந்து
விடுதலைப் போரில் வீறுகொண் டார்த்து (விலை)

## எந்தமிழர்க்கிது போர்வாள் !

நாடும் மொழியும் நந்தமிழ் இனமும்
நசிக்கப் படுகையில் நாடக மாடி
நம்முரி மைகளை விட்டுக் கொடுத்து
நத்திப் பிழைக்கும் "சிலஏ டிங்கே !

பாடுகள் எல்லாம் பரத்தைப் பாடாய்ப்
பசப்பி வந்து பல்லி ளித்துப்
பார்ப்பனத் தனமாய் இராசீ வுக்குப்
பாய்வி ரித்தே உயிர்த்தி ருக்கும் !

சூடு சொரணை யற்ற ஏடுகள்
தூக்கிப் புகழ்ந்து மாற்றலர் தம்மைத்
தொழுது கிடக்கும் தூய்மைகெட் டடிமைத்
தொழுநோய்ப் பிடித்து தூத்தூ. இங்கே

ஏடுகள் ஆயிரம் இருந்தென் பயனும்?
இனநலம் பேணித் தென்மொழி போல
எந்த ஏடு தொண்டு செய்கிறது?
எந்தமி ழர்க்கே இஃதொரு போர்வாள் !

# கனிச்சாறு ஊட்டும் மொழியுணர்வு!

(புலவர் ப. எழில்வாணன், க.மு., கல். இ).

மொழியுணர்வில்லா நாடு ஒளியிழந்த நாடாகும்; மொழியுணர்வில்லாத மாந்தன் விழியிழந்தவன் ஆவான். ஏனெனில் மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்துகிறது. மக்கள் ஒருவரோடு ஒருவர் நெஞ்சங்கலந்து அன்பை உணர்ந்து, அளவளாவி ஒன்றி வாழத் துணை புரிகிறது. எனவே மொழியுணர்வு மிகத் தேவையானதாகும். அதனடிப்படையில் மொழி உணர்வு உள்ளவர்கள் மொழியுணர்வில்லார்க்கு அறிவுறுத்துவது இயல்பே.

அவ்வகையில் இந்நூற்றாண்டில் வாழ்ந்த மறைமலை அடிகள், திரு.வி.க., பாரதிதாசனார், பாவாணர் போன்றவர்கள் தமிழ் மொழியுணர்வை தம் நூல்கள், சொற்பொழிவுகள், பாடல்கள் ஆகியன வழியாகத் தமிழர்க்கு உணர்த்தினர். அவர்களைப் போன்றே பாவாணரின் மாணவரும், பைந்தமிழ்ப் பாவலரேறும் ஆகிய பெருஞ்சித்திரனார் பலவகையாலும் தம் பாட்டுத் திறத்தால் தமிழ்மொழியுணர்வை உணர்த்தியுள்ளார். உணர்த்தியும் வருகின்றார்.

அவரின் 'கனிச்சாறு' (முதல்தொகுதி) என்னும் நூல்வழி தமிழர்க்கு அவர் ஊட்ட நினைக்கும் மொழியுணர்வு எத்தகையது என்பது பற்றியும், தமிழ்மொழி குறித்து அவர் கூறுவன யாவை என்பது பற்றியும் எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மொழி எனப்படுவது யாது? எதனினின்று அஃது எழுவது? இவை போன்ற வினாக்களுக்கு விடையாகப் பாடல்வழிக் கனிச்சாற்றில் பாவலரேறு பகர்வதைக் காணலாம்.

''மொழியெனப் படுவது உணர்வினுள் முளைப்பது!
மொழியெனப் படுவது மாந்தரின் முனைப்பு!
மொழியெனப் படுவது கல்விக் கடிப்படை!
மொழியெனப் படுவது பண்பொளிர் விளக்கம்!
மொழியெனப் படுவது உள்ளுயிர் முழக்கம்!
மொழியெனப் படுவது இனநல முயக்கம்!'' (பக்கம் :74)

மொழியெனப் படுவதற்கு இதனினும் எளிமையாக இனிமையாக, விளக்கமாக, பாடல் மூலமாக வேறு எவர்தாம் விளக்கம் கூறமுடியும்?

அத்தகைய மொழி, நமக்கு எத்தகையது? எவ்வகையில் நமக்கு நன்மை புரிவது? இவை பற்றி நம்மால் சிந்திக்க இயலாது போனாலும் பாவலரேறு கூறுவதைச் செவியில் வாங்கிக் கொள்ளாமல் போவது நமக்கு அழிவன்றோ?

''நம்மை நம்நாட்டை நலம் பல பேணி
நாளும் காப்பது மொழி!

நல்லன காட்டுத் தீயன களைய
உதவும்; நமக்கது விழி!'' (பக்கம் : 65)

என மொழி நமக்காற்றும் நன்மையை விளக்குகின்றார்.

நமக்கு விழியாக இருக்கின்ற மொழியைக் காப்பது நம் கடமையல்லவா? எனவேதான், பாவலரேறு எதனைக் காவா விடினும் மொழியையாவது காத்தல் வேண்டும் என்கின்றார்;

''எதனைக் காவா விடினும் தமிழர்
எந்தமிழ் மொழியையும் மரபையும் காக்க!
அதுதான் தமிழினம் அழியாது காக்கும்!
அதுதான் தமிழினம் இழியாது தேக்கும்!''
(பக்கம் : 205)

தமிழ் வாழ்ந்தாலே தமிழர் வாழமுடியும் என்னும் பாவலரேறு கருத்துக்குப் பாவேந்தர் கருத்தும் அரண் செய்கின்றது.

''தமிழ் எங்கள் உயிரென்ப தாலே — வெல்லும்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே'' —1

''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!'' —2

இனி, மொழிநலம் — இனநலம் எனப்பிரித்துப் பார்த்துத் தமிழினம் தன்னலக்குழியில் விழுந்து அழிந்து போதல் கூடாது என்பதில் பாவலரேறு கவலை தோய்ந்த கவனம் கொண்டு, அது பற்றிப் பாடுகின்றார். தமிழர்க்குப் பற்பல ஆழ்ந்த கருத்துகளால் அறிவுறுத்துகின்றார்;

''மொழிநலமே இனநலமாம் : முழுமாந்தப்
பெருநலத்தின் பகுதிக் கூறும்:
மொழிநலத்தைச் சிதைத்திடுவோர் இனம்
[சிதைப்போர்:
இனநலத்தின் முளையைச் சீய்ப்போர்:
மொழிநலத்தைக் காவாமல் இனமிழந்த
முழுநலன்கள் கோடி! கோடி!
மொழிநலமே கருத்துநலம்; கருத்திலையேல்
வினையில்லை; விளைவும் இல்லை!'' (பக்கம் : 52)

மொழிநலத்தை, இனநலத்தைச் சிதைப்பவர்கள் வேறு யாருமல்லர்! தமிழர்களே! தமிழர்களே தம்மையும் தாழ்த்தி, தம் இனத்தையும் அழிக்க முற்படுகின்றனர். இது பொய்யுரையன்று! மெய்யுரையே!

மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணரும், ''இவற்றைத் தமிழ் அருட் பெரும்பாலாரும், தம்மைத் தாமே தாழ்த்துவதிலும், இனத்தாரைப் பகைத்துப் பகைவரை வாழ வைப்பதிலும், பகைவர் மனங்குளிரத் தம் முன்னோரைப் பழிப்பதிலும், தம்மருமைத் தனி மொழியைப் புறக்கணித்துப் பகைவரின் அரைச்செயற்கை கலவை மொழியைப் போற்றுவதிலும் ஒப்புயர்வற்றவராய் உழல்கின்ற-

னர்,'' 3 என்று கூறுவதால் அறியலாம். இதனைத்தான் பாவலரேறு.

''தமிழனைத் தமிழனே தாழ்த்துகின் றனே!
தமைமீட்க எழுவோரைப் புறம்வீழ்த்து வானே!
சிமிழ்க்காத போரெனில் இவன்நீந்தும் மீனே!
சிற்சில காலமாய் அழிகின்றான் தானே!'' (பக்கம் : 95)

எனத் தனித்தமிழ்ச் சொல் கொண்டு பாடுகின்றார்.

இக்கட்டுரையாசிரியனும், இதே கருத்துத் தோன்ற,

''தமிழினத்தை அழிப்பவர்கள்
தமிழர்களே அறிந்திடுவாய்
தமிழ்மானம் பறிப்பவரும்
தமிழர்தாம் தெளிந்து கொள்வாய்! ''4 என்று

பாடியிருப்பதை ஒப்பு நோக்கி அறியலாம்!

இவ்வாறு தமிழினம் தம்மவர்களால் இன்று அழிந்திருப்பது கண்டு, அடிமைப்பட்டு வீழ்ந்திருப்பது கண்டு பாவலரேறு மனம் வெதும்பி உணர்வுடன் பாடுகின்றார்; தமிழர் தமிழுணர்வு கொள்வதற்காக!

''அன்று தொடங்கி இன்றைய நாள்வரை
அடிமைத் தமிழனே! நீ, துயில் எழுந்திட
நின்று கதறிய தொண்டைகள் எத்தனை?
நினைத்துப் புழுங்கிய நெஞ்சமும் எத்தனை?
ஒன்றும் பயனில்லை! ஒருசிறு மாற்றமும்
உணர்விலும் அறிவிலும் உருப்பெற வில்லைகாண்,''
''இன்னமும் எத்தனை யாண்டுகள் தமிழா
இங்ஙனே உணர்வற்றிருப்பாய்? (பக்கம் : 94)

என உள்ளம் குமைந்து தமிழனைக் கேட்கின்றார்.

பண்பு, அன்பு கொண்டு தமிழன் இதுவரை செய்த தவறுகள் இழிவுகளை மறந்து, இனியேனும் நல்லன செய்வதற்கு முற்பட வேண்டும் என்னும் நோக்கத்தில் பாடுகின்றார்;

'அன்புத் தமிழனே! அடிமைப் பிறவியே!
என்பு நெகிழ இதை உரைக் கின்றேன்!
சற்றே உன்செவி சாய்த்துக் கேட்பாய்!
முற்றும் எண்ணுவாய்! முடிவொன்று காண்பாய்!
இனியா கிலும்விழி; இழிவை அகற்று!
பனியும் மழையும் வெயிலும் பாராது
கடமையைச் செய்நீ! மடமையை உதறு!
உடைமையை நீ பெறும் நாளுமொன் றுண்டோ:''
(பக்கம் : 98)

தமிழனின் கடமை தமிழை, தமிழினத்தைக் காப்பதும், தமிழுணர்வை வளர்ப்பதும் தானே! அதற்காகத் துயில் நீங்கிக் கடினம் பாராது உழைக்குமாறு வேண்டும் அவரின் உணர்வு எத்தகையது என்பதனை நாம் எண்ணிப்பார்த்தால் மெய்சிலிர்க்குமன்றோ!

தமிழ் என்னும் பெயரில் தூய்மையிழந்து பிதற்றுவோர் எத்தகையராக இருந்தாலும், எத்தகைய இதழாக இருந்தாலும் நாம் எதிர்க்க வேண்டும். பிறமொழிச் சொல் கலவாத தமிழே தமிழாகும் என்பவற்றைப் பல்வேறு பாடல்களில் தம் பாட்டுத் திறத்தால் நம்மைப் பாடவும் வைத்துத் தூய தமிழைப் பேசவும் வைத்துவிடுகின்றார் பாவலரேறு அவர்கள்!

''தனித்தமிழைப் போற்றாதார் நூலெழுதல்
தமிழ்மொழிக்குக் கேடு செய்யும்!
தனித்தமிழைப் பேணாதார் உரையாற்றல்
தமிழினத்தை அடிமை கொள்ளும்!'' (பக்கம் : 52)

''தூயதமிழ் எழுதாத இதழொன்று தமிழகத்தின்
கடைகளிலே எழில்கொழிக்கத் தொங்கு மாயின்,
போயதனைப் பறித்தெடுத்துக் கிழித்தொருங்கே [புலங்குவித்துப்
புடைசூழ்ந்து தீமூட்டிப் பொசுக்கு வீரே!,'' (பக்கம் : 26)

எனச் சினந்து முழங்குகின்றார்! இவ்வரிகள்,

''கொலைவாளினை எடடா, மிகு
கொடியோர் செயல் அறவே!
குகைவாழ் ஒருபுலியே உயர்
குணமேவிய தமிழா!'' 5 என்னும் பாவேந்தர் பாடலை [நினைவூட்டுகிறதன்றோ?]

இத்தகைய உணர்வும், எழுச்சியும் தமிழர்க்கு இருந்தால் போதாது; அனைவரும் ஒன்றுபடுதல் வேண்டும். அவ்வாறு ஒன்றுபடாத இழிநிலையால்தான் தமிழ்ப்பகையை ஒழிக்க முடியவில்லை என்பதனை,

''ஆடினை ஆயிரம்! பாடினை ஆயிரம்!
ஆர்ப்புற யாத்தனை விடுதலைப் பாயிரம்!
அசைத்ததா பகைவரை ஒன்றனின் வாயுரம்?''
(பக்கம் : 93)

என்னும் பாடல் வரிகள் காட்டுகின்றன. எனவே, தமிழர்கள் ஒன்றுபட இன்றே எழ வேண்டும். இப்பொழுதே எழவேண்டும் என்கின்றார்!

''இன்றைக்கே எழாமல், நீ என்றைக்குத்
தான் எழுவாய்? எண்ணிப் பார்ப்பாய்!
''இப்பொழுதே எழாமல், நீ எப்பொழுது
தான் எழுவாய்? எண்ணிப் பார்ப்பாய்!'' (பக்கம் : 83)

இனி, தமிழ்மொழியின்மீது அவர்க்குள்ள தாழாத பற்றினால், தமிழர்கள் ஒன்றாய் இணைந்து விட்டனர் என்றுவது கூறி, அனைவரையும் ஒன்று சேர்க்க விரும்புகின்றார் என்பதனைக் கீழ்க் காணும் பாடலால் அறியலாம்:

''எங்கும் தமிழர்கள் ஒன்றாய் இணைந்தனர்!
இன்னுயிர் உடல் — என நன்றாய்ப் பிணைந்தனர்!
பொங்கும் உணர்வினால் மொழியையும் இனத்தையும்
புதுக்கினர்' — என்றே கொட்டா முரசம்'' (பக்கம் : 106)

இப்பாடல் வரிகள்.

''எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே'' 6 என்னும்

பாவேந்தனின் கருத்துக்கு இணையானதன்றோ!

இத்தகைய தமிழுணர்வைக் கொட்டித் தமிழினத்தை உயர்வு பெறச் செய்வதற்காக, தமிழ்மொழியைத் தூய்மைப்படுத்தி உலகாளச் செய்வதற்காகச் சுவையில் நாட்டங்கொண்ட தமிழர்க்குக் 'கனிச்சாறாக'ப் பாவலரேறு படைத்துள்ளார்! கனிச்சாறு தமிழர்க்கு வாய்த்த ஊட்டச்சாறு எனலாம்!

''செந்தமிழை மறவாதீர்! மறவாதீர்! உள்ளம்
சிலிர்த்தாடும் தமிழினத்தை மறவாதீர் என்றும்!''
(பக்கம் : 127)

## அடிக்குறிப்புகள்

1. பாரதிதாசன் கவிதைகள் (முதல் தொகுதி) பக்கம் : 94
   செந்தமிழ் நிலையம் — ஐந்தாம் பதிப்பு : 1983;
2. ,, ,, பககம் : 100
3. தமிழர் வரலாறு — பாவாணர் முகவுரை
4. ''நீ தமிழ் மகனா'' — (இக்கட்டுரை ஆசிரியன்) பக்கம் : 55
5. பாரதிதாசன் கவிதைகள் பக்கம் : 173
   (முன் குறிப்பிட்டது)
6. ,, ,, பக்கம் : 100

[குறிப்பு :

மதுரை, காமராசர் பல்கலைக் கழகத்தில் சூன் திங்கள் 11, 12. ஆம் நாள்களில் (11-6-88 — 12-6-88) நடைபெற்ற இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் 20- ஆம் மாநாட்டுக் கருத்தரங்கில் அஞ்சல்வழித் தொடர்கல்வித் துறைத் தலைவர் பேராசிரியர், முனைவர் இராம. சண்முகம் அவர்களின் தலைமையில் இக்கட்டுரை படிக்கப் பெற்றது. அம் மாநாட்டுக் கருத்தரங்கின் சார்பாக வெளியிடப் பெற்ற ஆய்வுக் கோவை தொகுதி — இரண்டில் இக்கட்டுரை இடம் பெற்றுள்ளது.]

---

## அன்பர்கள் கவனிக்க !

பொறுப்பாசியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். — அமைச்சர்

நூல் மதிப்பீடு : 6: சு : 24; ஒ : 5-இன் தொடர்ச்சி

# செயலும் செயல் திறனும்.

— பாவலர். ப. எழில்வாணன்.

(பாவலரேறு அவர்களின் 'செயலும் செயல் திறனும்' நூல் வெளியீட்டு விழா கடந்த 19-3-88 அன்று, சென்னை, தேவநேயப் பாவாணர் நடுவண் நூலரங்கில் உயர் நெறி மன்ற வழக்கறிஞரும், 'செந்தமிழ் நூல் வெளியீட்டுக் குழு'த் தலைவரும் ஆகிய திரு நா. நல்லப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்விழாவில் நூலை மதிப்பிட்டு அறிஞர் பலர் உரையாற்றினர்கள். அவ்வுரைகளில் ஒன்று இது. பிறரின் திறனாய்வுரைகளும் அவ்வப் பொழுது வெளியிடப்பெறும்.)

என்னும் குறளை (467) எடுத்துரைத்து ''எந்த ஒரு செயலும் தொடங்கப்படுவதற்கு முன் நன்றாக நம் அறிவு முழுமையாக அதில் ஈடுபடும் அளவிற்கு எண்ணப்படுதல் வேண்டும்'' என்று வலியுறுத்தி வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றார்.

இந்நூல் கருத்துக் களஞ்சியமாக மட்டுமின்றிச் சொல்லுக்கு நுட்பமாகப்பொருள் விளக்கும் சொல் நுட்பக் களஞ்சியமாகவும் விளங்குகிறது எனலாம்.

எ-டு: பக்கம் 10 காண்க:

''செப்பம்- என்பது செவ்வையாக - திருத்தமாக - அழகாக தவறில்லாதபடி என்க. நுட்பம் என்பது மிகவும் பொருத்தமாக கூர்மையாக, ஆழமாகக் கவனித்து என்க. ஒட்பம் என்பது தெளிவாக, விளக்கமாக, அறிவுணர்வு புலப்படும்படி என்க.'' இதனை இன்னும் விளக்கமாக எளிதில் விளங்கும்படி கூற விழைந்த பாவலரேறு அவர்கள் ஒரு சிலையை வைத்துக் கலையுணர்வோடு விலைமதிப்பிலா விளக்கத்தை அளித்துள்ளார்.

இவ்வாறு ''செயலும் செயல்திறனும்'' கருத்துச் செறிவுள்ள கருத்துக் களஞ்சியமாகவும், சொற்பொருள் விளக்கும் சொல்நுட்பக் களஞ்சியமாகவும் அவற்றை விளக்குவதில் உள்ளங்கவர் ஓவியமாகவும் திகழ்ந்து, செயல் தொடங்கி, செய்யும் திறனல் பயன்பல கண்டு, உயிர் வாழ்க்கைக்குச் செம்மையுற உரிய வழியைக் கூறி, வாழ்வு சிறக்க நமக்கு ஒளியூட்டும் வாழ்வியல் நூலாகவும் விளங்குகிறது என்பது உண்மையே!

இந்நூல் மாந்தராகப் பிறந்த ஒவ்வொருவரும் வாங்கிப் படிக்க வேண்டியநூல். ஒவ்வோர் அரசியல் தலைவரும் கையில் வைத்திருக்க வேண்டிய நூல்; இன்னும் கூறின், இற்றைநாள் நாட்டின் ஏற்படும் சீர்குலைவைப் போக்க அல்லது நீக்க நினைக்கும் தலைமை அமைச்சர் தவறாமல் படிக்கவேண்டிய தகுதி வாய்ந்த நூல்!

இந்நூல் மாந்தப் பிறவி எடுத்தவர்க்குப் பயனளிக்கும் பாலமிழ்தமாகும்: பயன் என்பது பற்றிக் கூட இந்நூலின்

இறுதியில் ''பயன் என்பது, எந்தக் காரணத்திற்காக, அச்செயலைத் தொடங்க எண்ணினோமோ, அது முற்றுப் பெற்று அதன் விளைவைத் தருவது'' என்று விளக்குகின்றார் பாவலரேறு அவர்கள்!

அவ்வகையில் ''செயலும் செயல்திறனும்'' படித்து அந்நூல் கூறும் முறையில் செயல்படுவார்க்குப் பயனளிக்கும் என்பது உறுதி:

வாழ்க பாவலரேறு! வளர்க அவர் தொண்டு!

நூல் மதிப்பீடு : 7. இல. க. இரத்தினவேல்.

அச்சாகும் நூல்எல்லாம் நூல்ஆமோ? ஆங்குசிலர்
மெச்சிஉரை செய்வதனால் மேலாமோ? — முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோறாய்ப்
படைத்துவிடல் ஆமோ, பசிக்கு?

என்ற தென்மொழிப் பாவலரேறுவின் நூலை ஆய என்னையும் பணித்தமைக்கு, மொழி ஞாயிறு பாவாணர் தமிழ்ப்பேராசிரியராய்ப் பணியாற்றிய, பாவலரேறு பயின்ற அதே சேலம் கல்லூரியில் நானும் பணியாற்றுவதும் ஒரு கரணியமோ?

வாழ்வியல் உண்மைகளை உலகுக்கே உணர்த்தும் திருக்குறள் மலர்ந்த தமிழ்நாட்டின் இன்றைய நிலை என்ன? : 'சொந்த உடன்பிறப்பைச் சூழ்ச்சியன் கொல்லும் போதும் சிந்தை இரங்காத' சீரழிந்த நிலையன்றோ, இன்று! இவ்வாறு நாம் இழிந்ததற்குக் காரணம் என்ன? மாந்தநேயப் பண்புகள் நம்மிடம் தொடர்ந்து சிதைந்து வந்ததும், அதைச் செம்மைப் படுத்த நாம் முயலாததுமே!

இக்கால் உள்ள நாட்டு நிலையை யறிந்த பாவலரேறு, ''இளைஞர்களின் மனவுணர்வு தீயுணர்வுகளில் வேரூன்றுவண்ணம் கட்டிக்காப்பது நிறைமாந்த உணர்வுடைய ஒவ்வொருவரின் கடமையாகிறது; அக்கடமையுள் ஒரு சிறு முயற்சியாகவே இக் கட்டுரைக் கருத்துகள் வைக்கப் பெறுவ''தாகக் கூறியுள்ளார். எனவே வளரும் தலைமுறையாவது அந்தச் சிறந்த பண்புகளைப் போற்றிக் கைக்கொள்ள வேண்டும் என்ற உந்துதலால் சிறுவர்கான தமிழ்ச்சிட்டுகளுக்குச் செயலையும் செயல்திறனையும் குறள்அறத்தின் வழியாகப் புகட்ட முனைந்தார், நம் பாவலரேறு, இது, சிறுவர்க்கு மட்டுமன்றி அனைவருக்கும் பயன்கூட்ட வல்ல அரிய பணியாகும்.

இந்த நூலின் ஒவ்வொரு பக்கமும் அரிய உண்மைகளை விதந்து உரைக்கிறது. இந்நூலைப் படிக்கும்போது எனக்குத் தோன்றிய பல கருத்துகளுள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

1. அமிழ்தினும் இனிய தமிழாய்க் கமழ்தல் :

1.1. மொழிநடை : 'இருந்தமிழே உன்னால் இருந்தேன், இமை

யோர் விருந்தமிழ்தம் என்ருலும் வேண்டேன்' என்ற தமிழ்விடு தூது ஆசிரியர் போல் நறுந்தமிழாம் தூயதமிழை நிலைநிறுத்து வதைத் தமது வாழ்வுப் பணியாகக் கொண்ட பாவலரேறு அவர்களின் நூல் ஆற்ரெழுக்கான, அழகிய, செறிந்த, நறுந் தமிழ் நடையில் அமைந்திருப்பதில் வியப்பில்லை.

1.2. திருக்குறள் தோய்வு : நல்லாற்றின் நின்றதுணைவரைப் பற்றி 38 குறள்களிலும் (பக்கம்94); மக்களுள் மாக்களைப் பற்றி 41 குறள் களிலும் (83-84); அறிவின் வகை பற்றி 20 குறள்களிலும் (146), கீழ்மைச் செயல்கள் பற்றி 9 குறள்களிலும் (247) — என எடுத்தி-யம்பும் திருக்குறள் சொல்லடைவுக் கணிப்பு ஒன்றைக் கொண்டே ஆசிரியரின் திருக்குறள் தோய்வைச் சட்டென உணர முடியும்.

1.3. தொகுப்பின் பகுப்பு : 'பெற்ற அறிவுக்குரிய செயலைச் செய்து கொண்டே மேலும் அறிவு பெறுவதுதான் வாழ்க்கைக்கு உரிய பயனைத் தரும்' என்று உற்றறிந்து ஆசிரியர் (118), அறிவுத் தளர்ச்சி ஆறுவகைப்படும் என்றும் புறத்தாக்கம் ஏழுவகைப் படும் என்றும் (209-223) பகுத்து, அவற்றை விளக்கிய திறமும்,

செயலின் கூறு எட்டு, உடலின்மீது செலுத்த வேண்டிய கவனம் ஆறு எனத் துணிந்ததும், உடலின் இரு இயக்கமும், உள்ளத்தின் இரு இயக்கமும் எவையெனக் கூறி, அக,புற உலகியல் உணர்வுக் கூறுகளை இரு பக்கங்களில் (274-276) பட்டியல் இட்டு உணர்த்திய பாங்கும், எண்ணுந்தோறும் மனத்துக்கு நிறை வளித்து மகிழ்விக்கிறது. அம்மட்டோ? பணியாளர் திறனை 41 வகையாய் அலசி ஆராய்ந்து தேர்ந்தமை அனைவருக்கும் வழி காட்டியாக அமையும்.

1,4. பாவியல் கூறும், அணிகளும் : எளிய உரைநடையில் இயம்புவதே என ஆசிரியர் வரையறுத்துக் கொண்ட போதிலும், ஆங்காங்கே பாவியல் கூறுகளும், அணிச்சிறப்பும் தலைகாட்டத் தவறுவதில்லை.

எச்சரிக்கையின் ஆறு கூறுகளான இதற்குப்பின் இது, இத-ஞல் இது, இதற்காக இது, இது போனுல் இது, இது வந்தால் இது, இதுவே இ'து என்பது பொருள் செறிவு மட்டும் மல்லாது பாவியல் கூறும் அணிநலமும் அமைந்தே உள்ளது. அங்-ஙனமே தான், இழப்பே இல்லாத ஊதியமும், ஊதியமே இல்-லாத இழப்பும் (229) என்ற தொடரும்;

## 2. மொழியியல் விளக்கங்கள் :

பாவாணரை ஆசிரியராகப் பெற்ற பாவலரேறுவின் மொழி-யியல் விளக்கங்கள் சிறக்க ஒளிபரப்புகின்றன:

2.1. சொல்லாய்வு : அறு என்னும் வேரடியாகப் பிறந்த சொல்-லே அறம்; பகு என்னும் வேரடியாகப் பிறந்த சொல்லே பகிர்வு என விளக்கி, 'அறம் என்பது பொதுமையை ஊட்டும் பகிர்வே' என நிலை நாட்டுகிருர்(20)

உழைப்பின் பெருமையை விளக்க வந்த ஆசிரியர், மாந்த நாகரிகத் தொடக்கக் கூறான உழைப்புத் தொழில் தமிழாக இருப்பதை விதந்து கூறி, தமிழின் முன்மையையும், தமிழின் பெருமையையும் ஒரு சேர நிலைநிறுத்துகிறார்:

''உழைப்பு, செயல், தொழில், தொண்டு, பணி ஆகிய சொற்கள் யாவும் உழவுத் தொழிலையே அடிப்படையாகக் கொண்டு தோன்றிய சொற்கள் ஆகும். உழு — உழை; செய் (நிலம்) — செயல்; தொள் — தொளு — தொடு — தொண்டு; பள் — பள்ளம் —பள்ளு — பண்ணு — பணி ஆகிய சொல் தோற்றங்களைக் கவனித்தால் அது விளங்கும்.'' (129)

2.2. சொல்விளக்கம் : ''திருவாளர் தாமரை'' எனத் தொடங்கும் திருக்கோவையாரில் திரு என்பதற்குப் பேராசிரியர், ''திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்; நோக்கம் என்றது அழகு'' எனத் திட்பமாய் உரைவரைந்து செல்கிறார்.

வினையை விரும்புதல் : விரும்புதல் என்பது, நம் சிந்தனையையும், ஆர்வத்தையும், அறிவையும், ஆர்வத்தையும், அதிலேயே ஈடுபடுத்தல் (10); விருப்பம் என்பது உயிருக்கு ஏற்கனவே தொடர்பாய் ஒரு பொருள் மேல் தானாகச் செல்லும் மனநாட்டம் (13).

உறுதி என்பது உடலுணர்வுத் தன்மையையும், ஊக்கம் என்பது உள்ள உணர்வுத் தன்மையையும் குறிக்கும் (113) — எனப் பாகுபடுத்தி, அறியாமை என்பது ஒன்றைத் தெரிந்து கொள்ளாமை; பேதைமை என்பது ஒன்றைத் தெரிந்து கொள்ள இயலாமை (139) — என வேறுபடுத்தி,

ஒரே பொருளுடைய ஊக்கத்தையும் ஒருவந்தத்தையும் (115) வகைப்படுத்தி உரைத்த திறம் பழந்தமிழ் உரையாசிரியராய் நூலாசிரியர் திகழ்வதைத் தெளிவு படுத்தும்.

2.3. சொல் நுண் வேறுபாடு :

செப்பம், நுட்பம், ஒட்பம் (10-11), திட்பம் (329) ஆகிய சொற்களை வேறுபடுத்தப் புகுந்த ஆசிரியர்,

செப்பம் என்பது செவ்வையாக, திருத்தமாக,
அழகாக, தவறில்லாதபடி — என்றும்,
நுட்பம் என்பது மிகவும் பொருத்தமாக, கூர்மையாக,
ஆழமாக, கவனித்து — என்றும்,
ஒட்பம் என்பது தெளிவாக, விளக்கமாக, அறிவுணர்வு
புலப்படும்படி — என்றும்,
திட்பம் என்பது உறுதியாக, திடமாக — என்றும்,
உடல்உரம், உள்ளஉரம், அறிவுஉரம் என்ற மூவுரம்,
மும்முரம் ஆகத்திரிந்தது என்றும்,

நுட்பவேறுபாட்டைக் கூறுவதையறிய மனம் மகிழ்கிறது.

### 3. அறிவியல் நெறிமுறைகள் :

'இனி நூலில் மிளிரும் அறிவியல் கூறுகளை ஆயலாம்.

3.1. இயக்கியம் :
இயற்கை யறிவியல் (natural sciences) ஆயினும் குமுக அறிவியல் (social sciences) ஆயினும், அவை இயக்கிய நெறி (dialectical laws) களுக்கு உட்பட்டே இருக்கும்; இருக்க வேண்டும்.

முரண்பாடுகளைப் பற்றிய ஆய்வே இயக்கியத்தின் சாரம் எனப்படுகிறது. ஒவ்வொன்றும் தன்னுள்ளே இரண்டு எதிர்மறை களைக் கொண்டுள்ளது; இந்த இரு எதிர்மறைகளுக்கு இடையில் ஆன உறவே முரண்பாடு எனப்படும்.

புறவிசை யின்றிப் பொருள்எதும் தன்னிலை யிற்பிறழா
துறும்இயக் கத்திணி வின்மாற்ற மேனிதான் தாக்குகின்ற
செறிவிசைக் குத்தக வாம்; விசைத் திக்கே செயல் அனைத்தும்
சரி எதிர் கொண்ம் எனச்சாற்றும் நியூட்டனில் முந்நெறியே!

என்ற இயக்க நெறிகளுள் மூன்றுவதான ''செயல் அனைத்தும் சரி எதிர் கொள்ளும்'' தன்மையை, 'வினையும், அதற்கு எதிர்வினையும் சேர்ந்துதான் வினையியக்கம் உருவாகிறது' (36, 112, 113) என நூலாசிரியர் எடுத்துரைக்கிறார்.

நேர்மின்னூட்டம் உற்ற முகிலும், எதிர் மின்னூட்டம் உற்ற முகிலும் அவற்றுக்கு இடையிலான கவர்ச்சி விசையால் ஒன்று சேரும்போது, பெரும் மின்னோட்டப்பாய்வு நிகழ்கிறது. இந்த ஆற்றல் மாற்றத்தில் ஒளியாற்றல் மின்னல் ஆகவும், ஒலியாற்றல் இடியாகவும் இறங்குகின்றன. அங்ஙனமே, ஒத்த பிறவும், 'பள்ள உவர்க்கடலில் பாய்ந்தோடும் வெள்ளம் என' நேர் மின்னூட்டம், எதிர் மின்னூட்டம் இவற்றுக்கிடையில் மின்னோட்டம் நிகழ்கிறது. இம்மின்னோட்டத்தில் ஆற்றல் மாற்றத்தைப் பெறப் பல வழிகள் உள்ளன (179). (மாறுதிசை மின்னோட்டத்தில் இவை கட்டம் (Phase), நடுமை (neutral) எனப் பெறுகின்றன.)

3.2. கணக்கு :
அனைத்து அறிவியல்களின் அன்னையான கணிதத்தில் வருவது போன்று, வாழ்வியல் சமன்பாடுகள் பல இந்நூலில் அணிசேர்க் கின்றன; அஞ்சாமைச் சமன்பாடு (163), உணவுச்சமன்பாடு (135), பொருள் வருவாய்க் கணக்கீடு (227) முதலானவற்றின் விரிவை நூலுள் கண்டு மகிழ்க.

அஞ்சாமையை விளக்கியபின் சமன்பாட்டு வடிவத்துக்குக் கொணரும்போது ஏற்பட்ட சில மாறுதல்களைத் திருத்திக் கொள்வோம்.

அஞ்சாமை + அறிவு —> ஆக்கம்
அஞ்சாமை + அறியாமை —> (வெறும்) வீரம்
அஞ்சாமை + அறிவின்மை —> கொடுமை

கோழை + அறிவு —> தனிமை
கோழை ÷ அறியாமை —> O
(கருத வேண்டியதே யில்லை)

3,3. இயல்பியல் என்ற பூதவியல் :

பொருண்மை ஆற்றல் குணநலன் களைவிரித்(து)
உரைத்து ஆராயும் அறிவியல் பூதநூல்

3.3.1. பொருண்மையும் ஆற்றலும் :

பொருண்மையையும் (m), ஆற்றலையும் (E) இணைத்த ஐன்சுடீன் சமன்பாடு (E = mc2)

E = m × c × c

இதில் c — ஒளியின் கதி (நொடிக்கு 3 இலக்கம் கிலோமீட்டர்) இதன்படி ஒரே ஒரு கிராம் நிறையுள்ள பொருள் முழுவதும் ஆற்றலாக மாற்றப்பட்டால் — அந்த ஆற்றலைக் கட்டுப் படுத்திச் சேமித்துச் சீராகப் பயன்படுத்த முடிந்தால், இந்த நீண்ட குழல் விளக்குகளைப் போல் 10000 விளக்குகளை ஓராண்டென்ன — நூருண்டென்ன — 25000 ஆண்டுகளுக்கு ஒளி உமிழச் செய்ய இயலும்.

இதில் பொருண்மையை அறிவுக்கும், ஆற்றலை உள்ளத்துக்கும் உவமிக்கிருர், பாவலரேறு (258).

3.3.2. காலமும் வெளியும் :

''வெளி என்பது உடன் இயைவுக்கான அனைத்துத் தொடர்புகளின் சாரம்; காலம் என்பது வரிசை முறைகளுக்கான அனைத்துத் தொடர்புகளின் சாரம்'' என்று காட்பிரைடு வில்எல்ம் லீபினிட்சு என்ற கணிதமேதை வரையறுத்தார். இரண்டு பொருள்களுக்கும் உள்ள இடைவெளி இடம் என்றும், 'இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் உள்ள இடைவெளி காலம்' என்றும் நம் நூலாசிரியர் முந்து நெறிப்படி வரையறுக்கிருர்.

3.3.3. ஒளி விளக்கம் :

'கட்புலப் படுத்துணர்வு ஒளியெனப் படுமே' என்பது ஒளிவிளக்கத்தின் தொடக்க நூற்பா. ஒளியை விளக்கப் புகுந்த நூலாசிரியர், தன்னைமட்டும் வெளிப்படுத்திக் கொண்டிருப்பது ஒளி ஆகாது; பிறவற்றையும் வெளிப்படுத்திக் காட்ட வல்லதே ஒளி' என அன்புக்கும் பேரன்புக்கும் உவமிக்கிருர்.

3.3.4. செயலும் செயல் திறனும் என்பதே பூதவியல் கொள்கை தான். வேலைதான் செயல்; 'வேலைசெய்யப்படும் மேனி திறனே' என்ற வரையறைப்படி செயலும் செயல்திறனும் விசையியக்கவியல் கூறுகளே !

3.4. வேதியல் என்ற இயைபியல் :

இயைபியலில் வரும் 'மின்னுல் இளக்கம்' (electrolysis) பற்றி உரைக்கிருர் பாவலரேறு.

3.5. மருத்துவம் :

இயைபியல் மூலகங்கள் இயற்கையாகக் கிடைக்கின்ற பொழுது உணவாகவும், செயற்கையாய்ப் பிரித்தெடுக்கும் பொழுது மருந்தாகவும் கருதப் படுகின்றன (188). சில உறுப்புகள் சில மூலகங்களைத் தேர்ந்து இஞ்சுகின்றன (selective absorp

tion); எடுத்துக் காட்டாகத் தைராய்டு சுரப்பி அயோடினைத் தேர்ந்து இஞ்சுகிறது.

3.6. உடலியங்கியல் (physiology) :

'உடல் உறுப்புகளை (190) — அஃது அக உறுப்பாயினும், புற உறுப்பாயினும் — இயக்குவது மூளையேயாகும். உடலின் தன்னியக்கம் மூளை வழியாகச் செயல்படுகிறது' (207) என்கிறார் ஆசிரியர்.

உடல் இயக்கத்துக்கு மாறான ஒரு வழக்கத்தைக் கண்டிக்கும் ஆசிரியர், தன் அழகு கெடும் என்று பிள்ளைக்குப் பால் கொடாதவளை தாய் என்று சொல்லுவதை விடப் பேய் என்று சொல்லலாம் (79) —

என்று மாந்தநேய வெளிப்பாட்டுடன் உணர்த்துகிறார். இயற்கைப்பால் ஊட்டாத அச்செயற்கைத் தாயரின் அழகுறுப்பைப் புற்றுநோய் தாக்கும் வாய்ப்பு மிகுதி என்பது இன்றைய மருத்துவக் கண்டுபிடிப்பு.

3.7. உளவியல் (psychology) :

உடலும் உள்ளமும் ஓய்வுபெறும் நிலையை ஐந்தாகப் பகுப்பர் அறிவியலார். கண்ணை மூடிக்கொண்டு, அசைவின்றிப் படுத்திருத்தல் முதல்நிலை; கனவுகள் வருவது நான்காம் நிலை; கனவுகளே அற்ற ஆழ்ந்த உறக்கம் இறுதிநிலை. அமைதியான ஓய்வுக்கு அமைதியான உறக்கத்தைச் சுட்டுகிறார் ஆசிரியர் (192)

மரபும் சூழலுமே (heridity and environment) மாந்தனை உருவாக்குகிறது. எனினும் சூழலின் தாக்கமே மிகுதி. இயற்கை உணர்வுகளை வளர்த்தெடுப்பது சூழலே. நுண்ணறிவு மரபு வழி வந்ததாயினும் 16 அகவை வரை அதனை வளர்த்தெடுக்கலாம் என்பர் உளநூலார்.

$$\text{நுண்ணறிவுக் குணகம் (I.Q)} = \frac{\text{மன அகவை}}{\text{உடல் அகவை} \rightarrow 16} \times 100\%$$

அறம் — அகம் மரபுக்கும், பொருள் — புறம் சூழலுக்கும் (90) முற்றும் ஒத்துவருதல் ஐயமே. உறக்கம், மரபு, சூழல் இவற்றைப் பற்றி உளவியலார் மிகவும் விரித்துரைப்பர்.

3.7. உடல்நல இயல் :

செயலும் செயல் திறனும் சீராக விளங்க உடல்நலம் பேணுதலை நூலில் பரக்க விரித்துரைக்கிறார், ஆசிரியர். திருவள்ளுவரின் வாழ்க்கை விளக்கத்தால் உணவையும் மருந்தையும் வேறுபடுத்தி, பொருந்தும் உணவையும் பொருந்தா உணவையும் விளக்கி உடலின்மேல் ஆறுவகைக் கவனத்தைச் செலுத்தி மக்கள் நூறாண்டு உயிர்வாழ்க்கைக்கு வழிகாட்டுகிறார், நூலாசிரியர்.

பசி உணர்வைப் படிக்கும்போது, அறிஞர் பாவ்லோவ் - இன் நாயின் பசி உணர்வுச் செயல் முறையும் நமது நினைவுக்கு வருகிறது:

# பெருஞ்சித்திரனார் நேருரைகள்!

(''உண்மை'' இதழின் சார்பாக உலகத் தமிழின முன்னேற்றக்கழக முதல்வரும் ''தென்மொழி'' ஆசிரியருமான பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களை 27-4-82 செவ்வாய் மாலை 6 மணி அளவில் அவரது இல்லத்தில் பாவலர் கலி. பூங்குன்றன் நேருரை கண்டார். உடன் பெரியார் பேருரையாளர் பேராசிரியர் ந. இராமநாதன் அவர்களும் சென்றிருந்தார்கள். பாவலரேறு அவர்கள், அவர்களை அன்புடன் வரவேற்று மகிழ்வு செய்தார்கள்.)

நேருரை கண்டவர் : புரட்சிப் பாவேந்தரிடம் தங்கட்குரிய தொடர்பு, நட்பு எந்த அளவில் இருந்தன?

பாவலரேறு : நான் கல்லூரிப் படிப்பை முடித்தபோது இரண்டு பாவியங்களை எழுதி இருந்தேன். அப்பொழுது எனக்கு 14 அல்லது 15 அகவை. அப் பாவியங்களைப் புரட்சிப் பாவேந்தரிடம் காட்டி மதிப்புரை பெற வேண்டும் என்று புதுச்சேரிக்கு வந்தேன். அவர்களிடமும் காட்டினேன். அதில் ஒரு பாடல்,

'வான்சிரித்து வண்ணவொளி வீசிற்றங்கே;
வயல்நோக்கிப் போந்தனர்தென் உழவரெல்லாம்;
கான்யாற்றின் கரையினில்நல் வஞ்சியர்கள்
கமழ்கின்ற சந்தனத்தை யள்ளித் தம்மென்
மேனிகளில் பூசுகின்றார்; பரிதி அந்த
மெல்லனைய ஒண்டொடியர் மீதில்செம்பொன்
போன்றொளியைப் பூசுகின்றான்! தமிழப் பெண்டிர்
புரள்கின்ற நீள்குழலால் வணக்கம் செய்வார்!'

'இப்பாடலில் கருத்துக் குறை இருக்கின்றது' என்று கூறி, அப்பாடல் எழுதியிருந்த சுவடியைக் கீழே அப்படியே போட்டு விட்டார். எனக்கு அதிர்ச்சியாகிவிட்டது. சிறிது நேரங் கழித்து வேறு சில பாடல்களைக் காட்டி அவற்றைக் கொஞ்சம் பாருங்கள் என்றேன். அதற்கு அவர் சொன்னார். 'பாட்டு எழுதுவது என்றால்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

3,9. அறிவுநெறி :

'காட்சி, கேள்வி, உசாவல், கல்வி, பாடு என்ற, ஐந்தும் ஒருங்கிணைவதே அறிவுபெறும் வழியாகும் (131). தொழிலறிவு ஆயினும் (45) அவ்வாறே. இதனைத் தெரியியல் (theory), புரியியல் (practice) என வகைப்படுத்தலாம். பட்டறிவுக் கூறான புரியியலைக் கைக்கொள்ளாததாலேயே பேரறிஞர் அரிசுடாட்டிலின் கொள்கைகள் பூதவியலில் தோல்வியைத் தழுவின. தெரியியலைப் புரியியலால் நிலைநிறுத்திய முதல் செயல்முறை அறிவியலார் ஆன கலீலியோ அறிவியலுக்குச் செழுமையூட்டினார்.

(தொடரும்)

Scanned with CamScanner

எல்லோருக்கும் வந்து விடாது; நிறைய முயற்சி செய்யணும்; நிறையப் படி; உனக்குப் பாட்டு எழுத வரும்' என்று சொன்ஞர். எனக்கு ஒரே வருத்தமாய்ப் போய்விட்டது. நேரே கடற்கரைக்குச் சென்றேன். அப்பொழுதுதான் முதல் முதலாக நான் கடலையே பார்த்தேன். பார்த்தவுடனேயே எனக்கு ஓர் உணர்வு பொங்கிக்கொண்டு வந்தது. உடனே அங்கேயே ஒரு பாட்டு எழுதினேன்.

சீறுகின்ற நாகத்திடை மணியும், சேற்றில்
சிரிக்கின்ற தாமரையும், காட்டி னூடே
நாறுகின்ற அகில் மரமும், மண்ணுக் குள்ளே
நற்பொன்னும் சிப்பியிடை முத்தும், ஆற்றில்
ஊறுகின்ற நல்லூற்றும், தீயைக் கக்கும்
உயர்மலையில் இயற்பொருளும் இருக்க, என்போல்
தேறுகின்ற பாவலர்க்கிங்(கு) இலக்கி யத்தில்
'திறமில்லை' என்கின்றார், என்ன செய்வேன்?

மணக்கின்ற தமிழாலே இன்பம் சேர்த்து
மக்களிடை யெழுத்தாலே ஓர் புரட்சி
கனக்கின்ற வகை செய்ய எண்ணங் கொண்டு,
'கவி' வாழும் மலர்க்காட்டின் வாழ்விடத்தில்
'எனக்கொன்று' வேண்டுமென்றேன். இலக்கி யத்தை
எடுத்தியம்பும் பெருமக்கள் என்னெழுத்து
'மணக்கின்ற விதமில்லை' என்று கூறி
மறுத்துவிட்டார் 'புலவனென' என்னே செய்வேன்?

''மலை கொடுக்கும் அழகையெல்லாம் சேர்த்தும், வானின்
மகிழ்கின்ற செம்பரிதி அழகும், நீல
அலைசூழும் கடல்பாடும் பாட்டும், காலை
அழகோடும் மங்கையர்கள் எழிலும், வாழ்வில்
நிலைகுன்றி வாழ்கின்ற மக்கள் நெஞ்சில்
நினைப்பூட்டும் பாடலெல்லாம் வரைவேன்'' என்று
கலைவல்லார் பாற்சொன்னேன்; என்றன் பாட்டில்
'கருத்தில்லை' என்கிறார் என்ன செய்வேன்?

இந்தப் பாடல், நான் எழுதிய பாடலைப் புரட்சிப் பாவேந்தர் ஏற்கவில்லையே என்ற ஏக்கத்தில் பிறந்த பாட்டாகும்.

அங்கிருந்து நேராக சேலம் திரும்பினேன். அதற்குப் பிறகு அரசுத்துறையிலே பணியாற்றச் சென்றுவிட்டேன். காட்டுத் துறையிலே பணியாற்றினேன். கூட்டுறவுத் துறையிலே ஆய்வாளராக இருந்தேன். அதெல்லாம் முடித்துவிட்டு 1954-இலிலே அஞ்சல் துறையிலே எனக்கு வேலை கிடைத்தது. நான்கைந்து ஊர்களைக் கொடுத்து எந்த ஊரில் பணியாற்ற விரும்புகிறீர்கள் என்று கேட்டார்கள். நான் முதலிலேயே புதுச்சேரியைத்தான் குறித்தேன்.

புதுச்சேரி போன தேவை !

ஏனென்றால், அங்கு பாவேந்தர் இருக்கிறார்; அவருடன்

தொடர்பு கொள்ள வேண்டும். அவருடைய தொண்டுக்குத் துணை நிற்கவேண்டும் என்று விரும்பினேன்.

நான் அஞ்சல் துறைக்கு வருமுன் காட்டுத்துறையிலே மைசூர்க்குப் பக்கத்திலே அன்செட்டி என்ற ஊரிலே எழுத்தராகப் பணியாற்றினேன். நல்ல வருமானம் வரும் துறை அது. அதைவிட்டு நான் வந்த நேரத்திலே, இவ்வளவு அருமையான வருமானம் அதிகம் உள்ள துறையைவிட்டுப் போகின்றீர்களே என்று தடுத்துப் பார்த்தார்கள்.

'தமிழ்தான் எனது வாழ்க்கை; அதற்காகத்தான் நான் வாழ்கிறேன். தமிழனுக்குத் தொண்டு செய்யவேண்டும்' என்று கூறிவிட்டுப் புதுச்சேரிக்கு வந்தேன். வந்தவுடனேயே நான் நமது பாவேந்தரைப் பார்த்தேன். பாவாணர் என்னைப்பற்றி எழுதியிருந்த ஒரு பாடலை எடுத்துக் கொண்டு நான் போயிருந்தேன். அந்த பாடல் எழுதப்பட்டது 1954-இல். முதன் முதலில் பாவேந்தரிடம் வந்தது 1952-இல். அதற்குப்பின் இரண்டாண்டுகளுக்குப் பின்பு நான் போகின்றேன்.

புரட்சிப் பாவலரின் பெருமிதம் !

'எங்கிருந்து வருகின்றீர்கள்" என்று கேட்டார். பொதுவாக, பாவேந்தர் 'நீங்க — வாங்க' என்று சொல்லுகின்ற அளவுக்குத் தகுதியிருந்தால்தான் அவர்களை அவ்வாறு அழைப்பார்கள்; இல்லையென்றால் எல்லோரையும் 'வா போ' என்றுதான் கூப்பிடுவார்.

பாண்டிச்சேரி முதலமைச்சராய் குபேர் இருந்தார். அவரைக் கூட அப்படித்தான் கூப்பிடுவார். 'இந்தாப்பா குபேரு...இந்தப் பையன் படிச்சிட்டு வேலையில்லாம இருக்கிறான். அவனுக்கு ஒரு வேலைகொடு — உடனே கொடு" — என்றுதான் சொல்லுவார். யாராயிருந்தாலும் கட்டளைப் போடுவதுதான். பெரிய அரசரைப் போலவேதான் நடப்பார். நெருங்கியிருந்து பார்ப்பவர்களுக்குத்தான் தெரியும், அவருடைய ஆளுமை நிலை! பழங்கால கழகக்காலப் புலவர்களிடம் இருந்த அந்தப் பெருமிதத்தை மூன்று நான்கு புலவர்களிடத்தில்தான் நான் பார்க்கிறேன். ஒன்று வை. பொன்னம்பலனார் தமிழ் மறவர். இரண்டாவது பாவேந்தர். மூன்றாவது பாவாணர். நான்காவது இங்கே வந்திருக்கின்ற நமது புலவர் பேராசிரியர் ந. இராமநாதன் அவர்கள். வளைந்து கொடுக்கமாட்டார். கொள்கை என்றால் அதில் சரியான பிடியிருக்கும்.

பாவேந்தர் பூரித்தார் !

பாவேந்தரிடம் பாவாணர் என்னைப்பற்றி எழுதின அந்தப் பாட்டினைக் காட்டினேன்.

"துரைமா ணிக்கம் இன்பத்தூடு
துள்ளும் இன்ப அருவிபோன்றே
வரைமாணிக்கம் ஆகிப் பல்ல

Scanned with CamScanner

வகையால் உணர்ச்சிப் பாக்களாக
உரைமாணிக்கக் கொத்தின் கற்கள்
உள்ளத் தழகாய்ப் பட்டை தீர்ந்து
திரைமாணிக்கம் என்னத் தேறித்
தென்னுடெங்கும் திகழ்க மன்னே''

அந்தப் பாடலைக் காட்டியவுடன் பாவேந்தருக்கு மிக மகிழ்ச்சி. பிறகு நான் சொன்னேன். 'அய்யா இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு உங்களை வந்து பார்த்திருக்கிறேன்' என்றேன். 'அப்படியா எனக்கு நினைவில்லையே' என்றார்.

நான் அப்பொழுது வந்தபோது அவர் சொன்னதைச் சொல்லி வருத்தப்பட்டுத் திரும்பினேன் என்பதையும், அது தொடர்பாக அப்பொழுது கடற்கரையில் நான் எழுதிய பாட்டையும் எடுத்துச் சொன்னேன்.

உடனே சொன்னார், 'அப்படியா நா.ன் சொன்னேன்? எனக்கு நினைவிலலையே. அப்படிச் சொல்லியிருந்தால் அதை நீ மறந்துவிடு' என்றார். நான் எழுதியிருந்த பாடல்களை யெல்லாம் காட்டினேன். அவற்றைப் படித்துப் பார்த்துவிட்டு, என்ன நினைத்தாரோ தெரியவில்லை. தம் மகன் மன்னர் மன்னனைக் கூப்பிட்டு, 'இந்தாப்பா, தம்பி நாம் தேடிக்கொண்டிருந்த ஒரு 'மனிதர்' இதோ கிடைத்து விட்டார். இப்படிப் பட்டவரைத்தானே நாம் எண்ணிக் கொண்டிருந்தோம்' என்று குறிப்பிட்டார்.

அவர் எப்படித் தேடினார்? யாரைத் தேடினார் என்று எனக்குத் தெரியவில்லை. உண்மைத் தமிழ் உணர்வுடைய ஒருவரை அவர் பார்க்க விரும்பியிருக்கலாம். அடுத்தபடி என்னைப்பற்றிக் கேட்டார். அஞ்சல் துறையில் பணியில் சேர்ந்ததை நான் குறிப்பிட்டேன்.

'இதெல்லாம் நமக்கு ஒத்துவராது; அதிகாரம், பதவி இந்த வேலைகளையெல்லாம் தூக்கிப் போட்டுடுங்க. நீங்க அதிலெல்லாம் இல்லாமல் தமிழுக்காகவே இருங்கள் — ஈடுபடுங்கள்' என்று சொன்னார்.

அவர் வாழும் தெருவிலேயே வீடு பார்க்குமாறு மகனிடம் சொன்னார். 'இந்த ஊரு ஒரு மோசமான ஊரு. யாரிட்டும் பழக்கம் வைத்துக் கொள்ள வேண்டாம். உங்க 'ஆபீசு' முடிந்தவுடனேயே நேரா இங்கேதான் வரணும். இங்கேதான் இருக்கணும்' என்றார். அன்றிலிருந்து ஓர் ஆறு ஆண்டுகள் அவரோடு நெருங்கிய தொடர்பு — குடும்பத்தோடு தொடர்பு எனக்கு இருந்தது. இடைக்காலத்திலே அவருடைய மகனுக்குத் திருமணம் நடந்தது 1955-இல். அந்தத் திருமணத்துக்கு நம்முடைய கோவை அய்யாமுத்து, பொன்னம்பலனார், பாவாணர், டார்பிடோ சனார்த்தனம் இவர்கள் எல்லாம் அங்கு வந்திருந்தார்கள். எல்லாருடனும் மகிழ்ந்து பேசிக் கொண்டிருந்தோம்.

(தொடரும்)

அருமையான இலக்கியப் படைப்புகளை ஆக்கிவுள்ளீர்கள். இனியும் அந்தக்கனியையே — இந்த நாட்டு மக்களுக்காக அன்று. மாந்த இனத்திற்காக — கனிச்சாறு'களை தந்து கொண்டேயிருங்கள். பாறை என்று நன்கு தெரிந்த பின்பும் பசுமை மரங்களை விதைத்துப் பயன்காண எண்ணுதல் வீணே அன்றோ? என்றேனும் ஒரு நாள் இதனைத் தாங்கள் எண்ணிப் பார்ப்பீர்கள் என்று இன்று எண்ணுகிறேன் நான். இதனைத் தாங்கள் உரையிலேயே உரைக்க வேண்டுமானால் ''அன்போ அறவோ அற்றவன் ஒருவனைப் பண்புடையானுய்ப் பண்ணுதல் வீணே!'' அன்புள்ள,

— ஆறுமுகம், பெங்களூர்-46

O: *1311:* அன்பிற்குரிய பாவலரேறு அவர்களுக்கு வணக்கம். அண்மையில் தமிழறிஞர் திரு. கி.ஆ.பெ அவர்கள் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி அரசுத்தனிசெயலரிடம் ஒரு வேண்டுகோள் கொடுக்க, எதிர்த்து திரு. புலவர். புகழேந்தி அவர்கள் ஒரு வேண்டுகை கொடுத்திருக்கின்றார்கள். இருவர் கொடுத்த வேண்டுகையயும் தாங்கள் செய்தித்தாள்களில் படித்திருக்கலாம். தங்களை நான் ஒரு முறை தொலைக்காட்சியில் நேர்உரை கண்டபொழுது எழுத்துச் சீர்திருத்தம் தொடர்பாகத் திட்டவட்டமான கருத்துகளைக் கொண்டிருந்தீர்கள். இவ்வேளையில் தன்னிகரற்ற தமிழ்க் காவலராக விளங்கும் தாங்கள் உங்கள் கருத்தைத் தெரிவிப்பது பொருத்தம் என்று கருதுகிறேன். அன்புள்ள,

முனைவர். ஆறு. அழகப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்.

ஆசிரியர்விடை :

பேரன்பின் இனிய தமிழ் நெஞ்சீர், தாங்கள் மடலில் கூறியிருந்த எழுத்துச் சீர்திருத்தம் தொடர்பாக, திரு. கி.ஆ.பெ. அறிக்கையையே செய்தித்தாளில் நான் பார்த்தேன். புகழேந்தியின் அறிக்கையை நான் கண்ணுறவில்லை. ஆனாலும் தாங்கள் கூறியவாறு நான் எவ்வகையான அறிக்கையும் கொடுக்கத் தேவையில்லை என்றே கருதுன்கிறேன். மேலும் இது தொடர்பான கருத்துகளை முன்னரே நான் தென்மொழியிலும், தமிழ்நிலத்திலும் வெளியிட்டுள்ளேன். அது கி.ஆ.பெ. வுக்கும் தெரிந்திருக்கும். அவரும் முன்பு எழுத்துச் சீர்த்திருத்தத்தை ஒருவாறு ஒப்பியவர்தாம்.

இப்பொழுதைய நிலையில் திரு. வ.செ. குழந்தைசாமி போன்றவர்கள் தங்களுக்கிருக்கும் சாய்காலைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழில் அளவுக்கு மீறிக் கைவைக்கத் தொடங்கிவிட்டனர். இந்தக் கொடுமையை எவரிடம் போய்ச் சொல்லுவது? நம் தமிழர்கள் இன்றைய நிலையில் எதையுமே கண்டு கொள்ளாத, எதைப்பற்றியுமே கவலைப்படாத இழிந்த பிறவிகளாக மாறிவருகிறார்கள். இந்த நிலையில் அவர்கள் என் போன்றவர்களை ஒரு பொருட்டாகவே மதிக்க மாட்டார்கள். இதில் என் கருத்தை எங்கே மதிக்க போகிறார்கள்? ''நற்பொருள் நன்குணர்ந்து, சொல்லினும் நல்கூர்ந்தார் சொற்பொருள் சோர்வுபடும்.''

— ஆசிரியர்.)

O: *1312:* பெருமதிப்பிற்குரிய ஐயா, அவர்கட்கு, வணக்கம். நலம். அனைவரும் நலமுடன் வாழ இறைப்பேராற்றலை இறைஞ்சுகிறேன். நீண்ட நாட்களுக்குப் பிறகு தொடர்பு கொள்கிறேன். இடையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைத் தென்மொழி, தமிழ்நிலம் வாயிலாக அறிந்தோம். தம்பி பொழிலன் சிறைப் படுத்தப் பட்டது ஒரு புறம் பெருமையாகவும், மறுபுறம் துயரமாகவும் உள்ளது. பொதுநல வாழ்வுக்குத் தங்கள் குடும்பத்தையே ஈடுபடுத்தி வாழ்வாங்கு வாழ்கிறீர்கள். எப்பொழுதும் உங்கள் நினைவாகவும் உங்கள் எழுத்துக்களால் அறிவூட்டப் பெற்றும் இருந்து வருகிறோம். தங்களன்பு, மருத்துவர் அ. விசுவநாதன், ஆத்தூர்,

Scanned with CamScanner

O: 1313: மதிப்பிற்கு உரிய பாவலரேறு அய்யா அவர்களுக்கு, தங்களுக்குப் பணிவான வணக்கங்கள். நான் எழுதும் இக்கடிதத்தில் உள்ள குறைகளை நீக்கி, நிறைகளை நோக்கிப் படிக்குமாறு வேண்டிக் கொள்கிறேன். அண்மைக் காலமாகத் தங்கள் பொத்தக வெளியீடுகளைப் படித்து வருகிறேன். தாங்கள் தனித்தமிழ் இயக்கமும் உ.த.மு.க. வும் நடத்தி வருவதையும் அறிகிறேன். தங்கள் கொள்கைகள் தமிழின மீட்சிக்கு உதவுவனவாக இருப்பதால் முழுமையான உடன்பாடும் கொள்கிறேன். நான் திராவிடர் கழகப் பற்றுடையவன். தங்கள் உ.த.மு.க. விற்கும் தி.க. விற்கும் அடிப்படையில் என்ன கொள்கை வேறுபாடு என்பதே புரியவில்லை. அப்படி வேறுபாடுகள் இல்லாத நிலையில் தி.க. வும் உ.த.மு.க. வும் ஒருங்கிணைந்து செயலாற்றுவதில் என்ன சிக்கல் என்றும் எனக்குப் புரியவில்லை.

நான் தங்களின் ''ஈழமக்களின் விடுதலைக்கு உண்மையான ஆதரவு — தமிழக மக்கள் விடுதலைக்கான போராட்டமே'' என்ற தீர்மானத்தைப் படித்து மிகவும் உணர்ச்சி வயப்பட்டு இரு பாடல்களை எழுதியுள்ளேன். இவ்விரு பாடல்களையும் தங்களின் இதழ்களில் ஏதாவது ஒன்றில் வெளியிட்டு என்னை ஊக்குவிப்பீர்கள் என முழுமையாக நம்புகிறேன். தமிழின மக்களின் மானம், உரிமை இவற்றுக்காக ஓயாது பாடுபடும் தங்கள் போன்றோர் நடத்தும் இதழ்களில் என் பாடல்கள் வெளியானால் நான் மிக்க பேறு பெற்றவனாகக் கருதுவேன்.

— கோ. இரவிச்சந்திரன், சென்னை-24

O: 1314: பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அய்யா அவர்களுக்கு வணக்கம். தினமணி இதழ் பற்றிய மதிப்பீடு உண்மை பொதிந்த ஒன்றென்பது அவர்கள் வெளியிட்டு வரும் ஒரு சில செய்திகள், ஆசிரியவுரை போன்றவை ஒருதலைவகையாக உள்ளதைக்கொண்டே காணமுடிகின்றது. இலங்கைச் சிக்கலைக் கொண்டு காண்கின்றபோது, தினமணிக்கு இருவேறு கொள்கை எனக் கொள்ளாவிட்டாலும், பல்வேறு கொள்கை என்பது வெளிப்படுத்தும் செய்திகளில் அறியலாம்.

பாவலரேறு அய்யா அவர்களின் ''கனிச்சாறு காட்டும் இயற்கை'' புலவர். ப. எழில்வாணன் அவர்களின் ஆய்வுக்கோவை கனிச்சாற்றைப் பருகும் பாங்கைக் கொண்டதையும் இயற்கை பா வகையில் எப்படி பகுக்கப்பட்டுள்ளது என்பதையும் அவரின் திறமான சொல்லாட்சி, இனிமையான படைப்பு ஆகியவற்றாலும் அறியவும், இலக்கியத் திறனை வெளிப்படுத்தியதாலும் அறிய முடிகிறது.

''தமிழர்களின் வாழ்வில் தாலி தேவையா'' திருவாட்டி. திரு. முல்லை அவர்களின் கட்டுரை தமிழர்களின் வாழ்வில் தேவையில்லாதவை திணிக்கப்பட்டுள்ளதும் ஒழுக்கமில்லாத தன்மையை வெளிக்காட்டும் ''தாலி'' அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்பதும். அவரின் ஆராய்ச்சி காட்டும் தெளிவு.

''தென்மொழி'' இதழ் இடர்ப்பாடுகள் கொண்டு வெளிவந்து கொண்டிருப்பது வருத்தந்தான் எனினும், தமிழர்களின் நலமும், கொள்கையும் இடர்ப்பாடுகள் கொண்டிருப்பதை இன்றைய நிலையில் கண்கூடாக அறியலாம். உரமிக்க தமிழர்கள் என்றைக்கும் தென்மொழி இதழைத் தாங்குவார்கள் என்பது உண்மை.

அன்புடன் : — பாவலர். இராவணதாசன் சென்னை-23